# தெளிவு


## பன்கீமூன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்



தற்போதைய ஐ.நா. அமையத்தின் செயலாளர் நாயகமும் முன்னை நாள் தென் கொரிய வெளியுறவு அமைச்சருமான பன்கி மூன் மீண்டும் செயலாளர் நாயகமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 67 வயதான பன்கீமூனுக்கு எதிராகப் போட்டியிட யாரும் முன்வராத நிலையில், 192 உறுப்பினர்களைக்கொண்ட ஐ.நா. பொதுச்சபையினால் அவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரது புதிய பதவிக் காலம் ஜனவரி முதலாம் திகதி தொடங்குகிறது. இலங்கையில் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக பன்கீமூனுடன் இலங்கை அரசாங்கம் பல விடயங்களில் கருத்து முரண்பாடும் அதிருப்தியும் கொண்டிருந்தாலும் அவரது நியமனம் தொடர்பாக இலங்கை தனது முழு ஆதரவையும் அவருக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையில் இன்னொரு தவணை பதவியேற்கவிருக்கும் பன்கீமூன் எதிர்காலத்தில் எவ்வாறு திட்டங்கள் வகுத்து செயல்படப் போகிறார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.


இதழ் 18 ஜூலை 2011 விலை 25.00


# பஹ்ரைனில் அராஜகம் தொடர்கிறது






பஹ்ரெயினில் எதிரணிப் பிரமுகர்கள் 8 பேருக்கு ஆயுள் தண்டனையும் 9 பேருக்கு 15 வருட சிறைத் தண்டனையும் மூவருக்கு 5 வருட சிறைத்தண்டனையும் ஒருவருக்கு இரு வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வருட முற்பகுதியில் அரசுக்கு எதிராக இங்கு இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது சதி முயற்சிகளில் ஈடுபட்டதாக இவர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டு அவசர அவசரமாக இவர்களுக்கு இத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இத்தண்டனையானது அங்கு மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் மன்னர் ஹமாட் பின் இசா அல் கலிபா தலைமையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேசிய நல்லிணக்கப் பேச்சுகளையும் இது சீர்குலைக்குமென அஞ்சப்படுகிறது. வெளிநாடு ஒன்றுக்காகப் பணியாற்றும் பயங்கரவாத அமைப்புடன் இணைந்து அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்ததாக 211 பிரதிவாதிகள் மீதான விசாரணையின் முடிவிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

211 பேரில் 6 பிரதிவாதிகள் ஆஜராகாத நிலையிலேயே இத்தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பு அளிக்கப்படும்போது அங்கு ஆஜராகியிருந்த பிரதிவாதிகளில் ஒருவர் எமது அமைதிவழிப் போராட்டத்தை தொடருவோமென உரத்துச் சத்தமிட்டதைத் தொடர்ந்து ஏனையவர்களும் அதேபோல் சத்தமிட ஆரம்பித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து நீதிமன்றத்திலிருந்து அவர்களை உடனடியாகப் பொலிஸார் இழுத்துச் சென்றதாகத்


15ம் பக்கம் பார்க்க...


## ஆசிய, ஆபிரிக்க சட்ட ஆலோசனை அமைப்பின் 50வது செயலமர்வு இலங்கையில்




ஆசிய, ஆபிரிக்க சட்ட ஆலோசனை அமைப்பின் ஐம்பதாவது வருடாந்தச் செயலமர்வை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 27.06.2011 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு சினமன் லேக்சயிட் ஹோட்டலில் ஆரம்பித்து வைத்தார்.

47 உறுப்பு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 200 பேராளர்கள் இதில் கலந்து கொண்டனர். இலங்கையின் நீதியமைச்சும், வெளிவிவகார அமைச்சும் கூட்டாக ஏற்பாடு செய்திருந்த இச்செயலமர்வில் அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் பார்வையாளர் அந்தஸ்தில் பங்குபற்றின. இவ்வமைப்பின் தலைவராகப் பணியாற்றிய தன்சானியாவைச் சேர்ந்த அந்நாட்டின் அரசியலமைப்பு, சட்டத்துறை அமைச்சர் செலினா கொம்பானி தலைமைப் பொறுப்பை இலங்கையின் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கையளித்தமை இதில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.


சர்வதேச நீதிமன்றத்தின் தலைவரான ஜப்பானைச் சேர்ந்த ஹிசாஷி ஒவாடாவும் இதில் கலந்துகொண்டார். ஒன்பது நாடுகளின்


15ம் பக்கம் பார்க்க...


## 67 உள்ளூர் சபைகளுக்கான தேர்தல் ஜூலை 23ம் திகதி

நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதன் காரணமாகவும், மிதிவெடி அகற்றப்படாமையினாலும் ஒத்திவைக்கப்பட்ட 67 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் ஜூலை 23 ஆம் திகதி நடைபெறுமென தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று அறிவித்தார். இதன்படி, வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட 65 உள்ளூராட்சி சபைகளுக்கும், மிதிவெடி அகற்றப்படாமையினால் மீள்குடியேற்றம் நிறைவடையாத இரு உள்ளூராட்சி சபைகளுக்கும் அன்றைய தினம் தேர்தல் நடத்தப்படும். இதில் 10 நகர சபைகள், 57 பிரதேச சபைகள் அடங்கும். இது தொடர்பாக குறித்த மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையாளர் பேச்சு நடத்தினார். அவர்களின் அபிப்பிராயங்களை பெற்ற பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் 67 உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல் நடைபெறும் எனவும் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.




15ம் பக்கம் பார்க்க...


## உள்ளே.....















துருக்கியில் இஸ்லாமிய அரசியல் - 6
கலாநிதி பதியுத்தீன் - 10
2010 க.பொ.த. [சா.த] பரீட்சை -2
காலம் கடந்த நீதி - 7
மஸ்னவி கதை - 13
ஹைதர் அலி - 14

# 2010 க.பொ.த. [சா/த] பரீட்சை

2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் விருப்பு வாக்குகள் வெளியாகிக் கொண்டிருந்த நேரத்திலும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி மாயை மயக்கத்திலும் நாடே மூழ்கியிருந்தபடியால் 2010 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சை பெறுபேறுகள் வெளியான விடயமும் அது தொடர்பான விபரங்களும் அவ்வளவாக ஊடகங்களில் இடம்பிடிக்கவில்லை. பல ஊடகங்கள் இதைக் கண்டுகொண்டதாகக் கூடத் தெரியவில்லை.



தினசரி பத்திரிகைகளின் நிருபர்களோடு தொடர்புள்ள பாடசாலைகள் 100 வீத சித்தி, 95 வீத சித்தி என தமது பாடசாலை பரீட்சைப் பெறுபேறுகளைப் பிரசித்தப்படுத்திக்கொண்டன. ஒரு பாடசாலை 60 சதவீதமானவர்கள் சித்தியடைந்தனர் என சித்தியடைந்த மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களோடு படமெடுத்து பத்திரிகையில் வெளியிட வைத்துள்ளது. எந்த செய்திக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதைச் சில ஊடகங்கள் அறிவதில்லை. பெரும்பாலான பாடசாலைகள் இதைவிட சித்திகளைப் பெற்றுள்ளதே இப்படிக் குறிப்பிடுவதற்குக் காரணமாகும். 3,10,642 மாணவ, மாணவிகள் தோற்றிய இப்பரீட்சையில் 1,95,112 பேர் க.பொ.த. (உ/த) வகுப்பில் கல்விகற்க தகைமை பெற்றுள்ளார்கள்.



அகில இலங்கை ரீதியில் பார்த்தால் உயரிய சித்திபெற்ற 15 மாணவர்களில் மூன்றில் இரண்டுக்கு மேல் பெண்களாவர். குருநாகல் மலியதேவ ஆண்கள் பாடசாலையைச் சேர்ந்த முஹம்மத் ரிசான் முஹம்மத்

## பெறுபேறுகளும் சில தகவல்களும்

அதீன் என்ற மாணவன் சிங்கள மொழியில் தோற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். கெகுனாகொல்ல தேசிய பாடசாலை மாணவன் முஹம்மது சாலிஹ் முஹம்மது அர்ஷாத் 15 ஆவது இடத்தைப் பெற்றுள்ளதோடு தமிழ்மொழி மூலத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். கடந்த முறையைப் போன்றே இம்முறையும் வடக்கு,கிழக்கு மாகாண மாணவர்கள் எவரும் இந்த வட்டத்திற்குள் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் 22 ஆம் திகதி நடைபெற்ற ஊடக மாநாட்டில் 2010 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சை தொடர்பான புள்ளிவிபரங்களை கல்வி அமைச்சரும் பரீட்சை ஆணையாளரும் வெளியிட்டு சாதனையென பெருமிதம் தெரிவித்துக் கொண்டார்கள். கடந்த ஆண்டுகளோடு ஒப்பிட்டு இந்தப் புள்ளிவிபரங்களைப் பார்ப்பதே பொருத்தமானதாகும். இது தொடர்பிலான விபரங்களை அறிந்த பின்பு விமர்சனங்களைப் பார்ப்பது நல்லதாக இருக்கும்.

இத்துடன் 2010 ஆம் ஆண்டு பரீட்சையில் 81% மாணவர்கள் பௌத்த சமய பாடத்திலும் 90% மாணவர்கள் இந்து சமயப் பாடத்திலும் 92% மாணவர்கள் இஸ்லாம் சமய பாடத்திலும் சித்தியடைந்துள்ளார்கள். ஆங்கில பாட சித்தி 41%.

2009 ஆம் ஆண்டு பரீட்சையில் 18,997 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் சித்தியடையவில்லை. 2010 ஆம் ஆண்டு பரீட்சையில் இத்தொகை 14,961 ஆகக் குறைந்துள்ளது. மேற்சொல்லப்பட்ட விபரங்கள் 2010 க.பொ.த. (சா/த) பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிட்டுத் தொகுக்கப்பட்டதாகும். சகல வகையிலும் இவை கடந்த ஆண்டு சிறப்பாக இருப்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இவ்வாறு அதிகரித்தமைக்கு பின்வரும் காரணங்கள் சொல்லப்படுகின்றன. வழக்கமாக மாணவர்களின் காலை வாறும் கணித பாடச் சித்தியை அதிகரிப்பதற்காக கல்வியமைச்சு மாகாண, மாவட்ட பாடசாலை மட்டத்தில் பலவிதமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாகப் பரீட்சைக்கு முகங்கொடுத்த மாணவர்களுக்கு அதிகமான கஷ்டங்கள் இருக்கவில்லை. முன்னாள் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தவணைப் பரீட்சை முறையை மீண்டும் ஆரம்பித்து மாதிரி வினாத்தாள்களைத் தயாரித்து பயிற்றுவிக்க வழிகாட்டியதோடு தற்போதைய கல்வியமைச்சர் பந்துல குணவர்தன நாடெங்கிலும் 1200 பாடக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து மாணவர்களுக்கு நல்லதொரு பின்னணியை உருவாக்கினார் என்று சொல்லப்படுகின்றது.

இரண்டாம் பகுதி கணித வினாத்தாள் இரண்டு மணித்தியாலத்தில் இருந்து இரண்டரை மணித்தியாலயமாக அதிகரிக்கப்பட்டது. ஆங்கிலம், கணிதம், விஞ்ஞான வினாத்தாள்களை மாணவர் விருப்பத்திற்குரியதாக்க பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டது. இவ்வாறான செயற்பாடுகள் பரீட்சை பெறுபேறுகள் அதிகரிக்கக் காரணமாகவிருந்தன என்று சொல்லப்படுகின்றது. ஆனால், இவைகள் சகலதும் தமிழ்மொழி மூல மாணவர்களுக்குக் கிடைத்ததா என்பது சந்தேகத்துக்குரிய விடயமாகும். ஆனால், கசப்பாகவிருந்தாலும் சிங்கள ஊடகங்களில் இதற்கு மாற்றமான கருத்துகள் கல்வித்துறை சார்ந்தவர்களால் வெளியிடப்படுகின்றது. 9ஏ சித்தி பெறுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட சிங்கள, தமிழ்மொழி மூல பல மாணவர்களை கட்டுரையாளர் பரீட்சை எழுதிய பின்னர் கண்டு அபிப்பிராயம் கேட்டபோது அவர்களில் பெரும்பாலானவர்களின் பதில் ஒரேமாதிரியாகவே இருந்தது. கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்கள் மிக்க கஷ்டமாக இருந்ததாகச் சொன்னார்கள். ஆனால், பரீட்சை முடிவுகள் வெளியானபோது இவர்கள் "ஏ" சித்தியை இப்பாடங்களில் பெற்றிருந்தார்கள். இதை ஒரு பெறுமதியான எடுகோளாக எடுக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், பின்வரும் விடயங்கள் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிட்ட பரீட்சை ஆணையாளரோ, கல்வியமைச்சரோ சித்தி மட்டப் புள்ளிகளை வெளியிடாமையில் கவனமாக இருந்தார்கள். வழக்கமாக இது வெளியிடப்படுவதில்லை யாயினும் இம்முறை இது தொடர்பாக நிறைய விமர்சனங்கள் உள்ளன.

ஆங்கில பாட ஏ சித்திக்கு 70 புள்ளிகளும் பி சித்திக்கு 60 புள்ளிகளும் சி சித்திக்கு 43 புள்ளிகளும் எஸ் சித்திக்கு 30 புள்ளிகளும் கவனத்தில் கொள்ளப்பட்டதாகவும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு இதைவிடக் குறைக்கப்பட்டதாகவும் ஊடகங்களில் கருத்துகள் வெளியிடப்பட்டிருந்தன. சில தவறான வினாக்களுக்கு அல்லது பரீட்சை திணைக்களம் விடும் தவறுகளுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படுவது வழக்கம். சில சந்தர்ப்பங்களில் சாதாரண சித்திக்கான மட்டப்புள்ளி 35 இல் இருந்து ஒரு இரு புள்ளிகள் குறைக்கப்பட்டமை கடந்த காலங்களில் நடைபெற்றதுண்டு. கடந்த காலங்களில் அதிகரிப்பு அல்லது குறைவு வீதங்களில் ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை இருந்தது. ஆனால், கணித பாடத்தில் கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது 23 வீத அதிகரிப்பும் விஞ்ஞான பாட அதிகரிப்பு 35 வீதமாகவும் உள்ளது.


சகல பாடங்களிலும் ஏ சித்திகள் பெற்றவர்களின் அதிகரிப்பு 35 சதவீதமாகும். இவைகள் போன்ற பல புள்ளிவிபரங்களை அலசும் போது அல்லது கருத்தாடல்களில் ஈடுபடும்போது பலவித சந்தேகங்கள் முன்வைக்கப்படுகின்றன. வினாத்தாள்களுக்கு விடையளிக்கும் காலம், வினாக்களின் தன்மையானவை புள்ளிகளை கீழ் இறக்க காரணமாக அமையலாம். ஆனால், சாதனையாளர் என்று பேர் எடுப்பதற்காக இவ்வாறான செயற்பாடுகள் செய்யப்படுமானால் அது உயர்கல்வித்துறையை வெகுவாகப் பாதிக்கும். கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் ஏ அல்லது பி சித்திகளைப் பெற்றுள்ளோம் என்ற காரணத்தால் க.பொ.த. (உ/த) இல் விஞ்ஞான, கணித கற்கைத் துறைகளைச் தெரிவு செய்தால் மாணவர்களே கஷ்டப்படுவார்.

பரீட்சைத் திணைக்களம் தொடர்பாக குற்றச்சாட்டுகள் எதுவும் வந்தால் உடனடியாக பரீட்சை ஆணையாளர் ஊடகங்களில் பதிலளிப்பார். ஆனால், இவ்வாக்கம் எழுதப்படும்வரை எந்தவித அறிக்கையும் பரீட்சை ஆணையாளரால் வெளியிடப்படவில்லை. தேசிய கொள்கைகள் தொடர்பாக ஒருசில கல்விமான்கள் தமிழ்மொழி மூலம் ஆய்வுகளைச் செய்து அபிப்பிராயம் வெளியிட்டு வருகின்றார்கள். தமிழ்பேசுவோரின் கருத்துகள், அபிப்பிராயங்கள் பெரும்பாலும் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்ற குறைபாடும் சொல்லப்பட்டு வருகின்றது. ஒரு பரந்த விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய விடயப் பரப்புகள் உண்டு. அவைகளில் பரீட்சை தொடர்பான விடயங்களும் முக்கியமானவையாகும்.

2010 க.பொ.த. (சா/த) பரீட்சை தொடர்பான இவ்வாக்கம் ஆழமானதொரு ஆய்வல்ல என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும். ஆனால், இப்படியான கருத்தாடல்கள் சிங்கள மொழியில் இடம்பெற்று வருகின்றன. இப்படியான விமர்சனங்களும் உள்ளன என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே இவை வெளிக்கொணரப்படுகின்றன.

நன்றி: தினக்குரல்

# கிரேக்கத்தில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்







## யுத்த களமாக மாறிய ஏதன்ஸ் நகரம்

அரபு நாடுகளைப்போல ஐரோப்பிய நாடுகளிலும் அரசுக்கு எதிரான கலவரங்கள் தலைதூக்கி வருகின்றன. அண்மையில், கிரேக்க நாட்டில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் நடந்த கைகலப்பால் தலைநகர் ஏதன்ஸின் வீதிகள் யுத்தளமாக மாறின. புகைக் குண்டுகளைப் பாவித்தும் தண்ணீரைப் பாய்ச்சியும், தடியடி நடத்தியும் பொலிஸார் ஆர்ப்பாட்டககாரர்களைக் கலைக்க முயன்றபோதே வன்முறைகள் தலை தூக்கின.

பல இடங்களில் கைகளில் பொல்லுகள் மற்றும் இரும்புப் பொல்லுகளுடன் இருந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் பொலிஸாருடன் நேரடியாக மோதிக் கொண்டனர். கிரேக்கத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள், அரசின் செலவுக் குறைப்புத் திட்டம் என்பனவே பாரிய அளவிலான அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முக்கிய காரணங்களாகும்.

இந்த எதிர்ப்புக்களை அடுத்து ராஜினாமாச் செய்ய கிரேக்க பிரதமர் முன்வந்துள்ளார். அமைச்சரவையில் இன்று மாற்றங்கள் செய்யப்படும் என்றும். அதனைத் தொடரந்து புதிய அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் கோரப்படும் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்.

கிரேக்கம் இறுக்கமான பொருளாதாரக் கொள்கைகளை அமுல் செய்ய வேண்டும் என்று ஐரோப்பிய யூனியனும், சர்வதேச நாணய நிதியமும் அழுத்தங்களைப் பிரயோகிக் அரம்பித்துள்ளன. அரசாங்கம் சிக்கன பொருளாதாரப் போக்கின் ஒரு அங்கமாக 25 பில்லியன் பவுண் செலவுக் குறைப்புத் திட்டத்தை அமுல் செய்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 24 மணிநேர வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தங்களது எதிர்ப்பின் ஒரு கட்டமாகவே வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டங்களின்போதே காவலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சுமார் ஐயாயிரம் பொலிஸாருடன் அவர்கள் நேரடியாக மோதிக் கொண்டனர்.

# கடாபிக்கு குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை



லிபிய ஜனாதிபதி முஅம்மர் கடாபிக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி) பிடியாணை பிறப்பித்துள்ளது.


லிபியாவில் மனித விரோத செயல்களில் ஈடுபட்ட குற்றத்திற்காகவே ஐ.சி.சி. நீதிபதிகள் குழு இந்த பிடியாணையை பிறப்பித்துள்ளது. இதில் முஅம்மர் கடாபியின் மகன் சைப் அல் இஸ்லாம், லிபிய உளவுப்பிரிவு தலைவர் அப்துல்லா அல் சனூசி ஆகியோருக்கும் ஐ.சி.சி. பிடியாணை பிறப்பித்துள்ளது.

இதற்கிடையில், லிபிய தலைநகர் திரிபோலியில் உள்ள கடாபியின் வீட்டை குறிவைத்து, கடந்த சில நாட்களாக நேட்டோ படைகள் பயங்கர தாக்குதல்கள் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலை எதிர்கொள்ளாமல் விரைவில் கடாபி, திரிபோலியை விட்டு ஓட்டம் பிடிப்பார் என நேட்டோ படைகள் கூறி வருகின்றன.

இந்நிலையில், கிளர்ச்சியாளர்களுக்கான தேசிய ஆட்சி மாற்றக் கவுன்சில் செய்தி தொடர்பாளர் மஹ்மூத் ஷம்மம், பரீஸில் இருந்து வெளியாகும், "லீ பிகாரோ" பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில், லிபிய தலைவர் கடாபியுடன் மத்தியஸ்தர்கள் சிலர் மூலம் பேச்சு நடத்தப்படுகிறது. தென்னாபிரிக்காவிலும், பாரீஸ் நகரத்திலும் கடாபி அனுப்பிய மத்தியஸ்தர்களுடன் இந்தப் பேச்சு நடந்தது. அப்போது, லிபிய தலைவர் பதவியை கடாபி ராஜினாமாச் செய்ய வேண்டும். நாட்டின் ஏதாவது ஒரு பகுதிக்கு செல்ல அவர் ஒப்புக் கொள்ள வேண்டும் என எங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. கடாபி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள், லிபியாவில் எதிர்காலத்தில் அமையும் அரசில் எவ்வித பொறுப்பும் வகிக்க முடியாது. தேர்தல் மூலம் இடைக்கால அரசை அமைக்க லிபிய நாட்டு அதிகாரிகள் யார் பேச்சுவார்த்தைக்கு வந்தாலும் நாங்கள் பேச தயாராக இருக்கிறோம் என்று கூறினார்.

லிபியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் அப்துர் ரஹ்மான் ஷல்காம் கூறுகையில், ஆபிரிக்காவில் அல்லது பெலாரஸ்சில் தஞ்சமடைய கடாபி ஒப்புக் கொண்டுள்ளதாக நம்பப்படுகிறது. சில வாரங்களில் லிபியாவை விட்டு கடாபி வெளியேறலாம் என்றார்.

# ஆப்கானிலிருந்து பத்தாயிரம் படையினர் வாபஸ்





ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருக்கும் அமெரிக்கப்படையினரில் 10 ஆயிரம் பேர் வரும் ஜூலை மாதம் வாபஸ் பெறப்படுவார்கள் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா திடீரென அறிவிப்பு வெளியிட்டுள்ளார். ஆப்கானிஸ்தான் நிலைமை முன்னேறி வருவதால் இனி அங்கு அமெரிக்கப் படைகள் அதிக அளவில் தேவைப்படாது. எனவே, அங்குள்ள படையின் பெரும் பகுதியை வாபஸ் பெறவிருக்கிறோம். இதில் முதல்கட்டமாக வரும் ஜூலை மாதம் 10 ஆயிரம் வீரர்கள் வாபஸ் பெறப்படுகிறார்கள் என்று கூறியுள்ள ஒபாமா, அடுத்த ஆண்டு இறுதிக்குள் 23 ஆயிரம் வீரர்கள் வாபஸ் பெறப்படுவர். இது தவிர 63 ஆயிரம் வீரர்கள் தொடர்ந்து அங்கேயே இருப்பார்கள் என்றும் தெரிவித்துள்ளார். அவர்கள் வரும் 2013-ம் ஆண்டு இறுதிக்குள் முற்றிலுமாக வாபஸ் பெறப்படுவார்கள் என்றும், அமெரிக்கப்படைகள் வெளியேறிய பிறகு ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பை அந்நாட்டு படைகள் கவனித்துக் கொள்ளும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பின்லேடனை ஒழிக்கப் போவதாகக் கூறி ஆப்கானிஸ்தானில் நிலைநிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கப் படையினரில் இதுவரை 1500 பேர் உயிரிழந்துள்ளனர். 12 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். இந்த படைகளுக்கு ஒரு வாரத்திற்கு ஆகும் செலவு 4 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், இது அமெரிக்காவில் கடுமையாக விமர்சிக்கப்பட்டதால்தான் படை களை வாபஸ் பெற முடிவு செய்யப்பட்டது

# ரஷ்ய விஞ்ஞானிகளின் உயிரிழப்பினால் ஈரானின் அணு உலை நிர்மாண முயற்சிக்குபின்னடைவு

அண்மையில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில், ஈரான் அணு உலை நிர்மாணப்பணியில் ஈடுபட்டிருந்த ரஷ்ய விஞ்ஞானிகள் ஐவர் உயிரிழந்துள்ளதாக ரஷ்யா உத்தியோகபூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்து ஈரான் அணு உற்பத்திக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ரஷ்யாவைச் சேர்ந்த இவர்கள் ஐவரும் நீண்டகாலமாக ஈரான் அணு உலை நிர்மாணப்பணியில் ஈடுபட்டுவந்துள்ளனர். ஐவரில் மூவர் அணு உலை வடிவமைப்பாளர்கள் என்பதுடன் மற்றைய இருவரும் அணுத் தொழிநுட்பத்தில் நிபுணர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகவலை ரஷ்யாவின் முக்கிய அணு முகவர் நிலையமொன்று வெளியிட்டுள்ளது. ரஷ்யாவில் டியு- 134 என்ற விமானம் கடந்த திட்களன்று விபத்துக்குள்ளாகியது. இவ்விமானத்தில் இந்நிபுணர்கள் பயணித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் அணு உலை நிர்மாணத்திற்கான உபகரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மொஸ்கோவிலிருந்து புறப்பட்ட விமாத்தில் பயணித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் உயிரிழப்பானது ஈரானின் சர்ச்சைக்குரிய அணு உற்பத்தி முயற்சிக்கும் ரஷ்யாவிற்கும் பாரிய இழப்பாக கருதப்படுகின்து.

தெளிவு THELIVU 38, Moor Road, Dehiwela
TP: 0114942267, 0112712845 Email: thelivu009@gmail.com

# பயங்கரவாதம் படுத்தும் பாடு

மேற்கத்தியர்களைப் பகைத்துக்கொண்டால் என்ன நடக்கும் என்பதற்கு அண்மைக்கால இலங்கை சம்பவங்கள் நல்ல எடுத்துக்காட்டுகளாகும். மனித உரிமை, போர்க் குற்றம், பயங்கரவாதத்துக்கு எதிரான போர் போன்றவை எப்படியெல்லாம் உருவெடுக்கும் என்னென்ன வரைவிலக்கணங்களை வழங்கும் என்பதெல்லாம் மேற்கத்தியர்களிடம்தான் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களது கூற்றுகளையும் கொள்கைகளையும் நியாயப்படுத்துவதற்கென்றே ஊடகங்களையும் ஊட்டி வளர்த்து வைத்திருக்கிறார்கள்.

மத்திய கிழக்கின் ஒரே ஜனநாயக நாடு என மேற்கத்தியர்களால் புகழ்ந்துரைக்கப்படும் இஸ்ரவேல், அது உருவான நாள் தொட்டு, போர்க்குற்றவாளிகளினால்தான் ஆளப்பட்டு வருகின்றது என்பதை அனைவரும் அறிவர். அவர்களின் அடாவடித்தனங்களுக்கு ஐ.நா. தீர்மானங்கள் நிறைவேற்றுவதோடு சரி. ஆனால் சதாம் ஹுசைன், கடாபி போன்றவர்களுக்கு கச்சை கட்டிக்கொண்டு களத்தில் குதித்துவிடுகிறார்கள் ஐ.நா. ஆதரவுடன். லிபியாவில் ஜனநாயகம் மலர வேண்டும், பஹ்ரைனில் சர்வாதிகாரம் தொடர வேண்டும். சிரியாவில் மனித உரிமை நிலை நாட்டப்பட வேண்டும், ஆனால் எகிப்துக்கு அது தேவையில்லை. சவுதியில் மன்னராட்சி தொடரலாம், ஆனால் ஈரானில் இஸ்லாமிய ஆட்சி இருக்கக் கூடாது. பின் லேடனையும் அவரது சகாக்களையும் வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்து கொன்றது நியாயம், ஆனால், பிரபாகரனையும் அவனது கூட்டத்தாரையும் யுத்தகளத்தில் கொன்றது அநியாயம். அதற்கொரு தருஸ்மான் அறிக்கை, சனல் 4 காணொளி, பிடியாணை...... வேடிக்கையாயில்லை?


உண்மையிலேயே பலஸ்தீனர்களது உடமைகளை அழித்தும் அவர்களது நிலங்களை ஆக்கிரமித்தும் பெண்களையும் குழந்தைகளையும் முதியவர்களையும் கொன்று குவித்து கொடுமைகள் புரிந்துவரும் ஸியோனிஸவாதிகளை எதிர்த்து நிற்பதற்கு சர்வதேச அங்கீகாரத்துடனான உரிமை பலஸ்தீனர்களுக்கு உள்ளது. மீடியாக்கள் வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், இஸ்ரவேல் தொடர்ந்தும் அரச பயங்கரவாதத்தையே நடைமுறைப்படுத்தி வருவதை அனைவரும் அறிவர்.

ஆனால் மேற்கத்திய மீடியாக்கள் அதனை "பாதுகாப்பு" என நியாயப்படுத்த முயல்கின்றன. சட்டவிரோதமாக திணிக்கப்பட்ட ஒரு நாடு தனது அண்டை நாடுகளை ஆக்கிரமித்திருக்கும் நிலையிலும் சர்வதேச நிறுவனமான ஐ.நா. அமையம் அவற்றைக் கண்டித்து பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ள நிலையிலும் அவர்கள் "பாதுகாப்பு" பற்றி பேசுவது விந்தையாகவே உள்ளது. சதா சஞ்சலத்துடனும் அச்சத்துடனும் வாழ்க்கை நடத்தும் பலஸ்தீனர்களுக்குத்தான் உண்மையிலேயே "பாதுகாப்பு" தேவை என்பதை யாரும் கூறித் தெரியவேண்டிதில்லை. பெரும்பாலும் பாரம்பரிய ஆயுதங்களை மட்டுமே வைத்துக்கொண்டு போராடும் பலஸ்தீனர்களை நோக்கி இஸ்ரவேலர்கள் ஏவுகணைகள், ராக்கெட்டுகள், பீரங்கிகள் மற்றும் போர்விமானங்கள் என்பவற்றின்மூலம் தாக்குதல் தொடுக்கின்றனர். இது எந்தவகையில் யுத்த தர்மமாகும் என்பதை எந்த சர்வதேச நிறுவனமாவது சிந்தித்ததுண்டா? ஏன் இவற்றையெல்லாம் "பயங்கரவாதம்" என அழைப்பதில்லை?

பயங்கரவாதம் பெரும்பாலும் அதன் அரசியல்மயமாக்கப்பட்ட பாவனையைப் பொறுத்து கருத்துகளும் மாறுபடுகின்றன அல்லது தேவைக்கேற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றன. அண்மைக் காலங்களில் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் பயங்கரவாத்தின் உண்மையான கருத்தைக் கொள்ளையடித்துள்ளது என்றே கூறவேண்டும். எந்த நாடுகளில் தமது நலன்களுக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் எழும்போதெல்லாம் அந்த நாடுகளை அடக்கி ஒடுக்கி வழிக்குக் கொண்டுவருவதற்கு இந்த "பயங்கரவாதம்" என்ற சொல்லே பயன்படுத்தப்படுகின்றன.

பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளில் சுதந்திரம் அடைந்த பின்பும் அங்கிருந்த வளமான நிலங்கள் குறிப்பாக சிம்பாப்வே, தென் ஆபிரிக்கா, கென்யா போன்ற நாடுகளில் காலனித்துவவாதிகளே சொந்தமாக்கிக் கொண்டுள்ளனர். அவற்றைத் திரும்பப் பெறுவதற்கான அரசியல் யாப்பு சீர்திருத்தாங்கள் கொண்டுவரும்போதும் ஆர்பாட்டங்கள் நடைபெறும்போதும் அவற்றுக்கும் மேற்கத்திய மீடியாக்கள் பயங்கரவாத முத்திரையையே குத்துகின்றனர்.

இவற்றையெல்லாம் நம்மால் வெற்றிகொள்ள முடியாதா? அதற்கு நாம் முதலில் ஐக்கியப்பட வேண்டும். நாம் பின்பற்றும் கண்மூடித்தனமான மேற்கத்திய கலாசாரத்துக்கு முழு மனதுடன் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். எமது போலித்தனங்களைக் கைவிட வேண்டும். இவை சாத்தியமானால் அதுவும் சாத்தியமே!



# இஸ்லாமியர்கள் தொட்டுக்கொள்ள ஊறுகாய் அல்ல!

இக்கட்டுரை கீற்று இணையதளத்தில் சகோதர மத்தைச் சேர்ந்த சகோ. ஆத்மார்த்தி என்பவரால் எழுதப் பட்டது.

இந்தக் கட்டுரையின் நோக்கம் நேரடியாகவே சொல்வதற்கு முனைவது தான்.

நீங்கள் குற்றமிழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

ஆம். குற்றமிழைத்துக் கொண்டிருப்பவர்களைத் தேடிக் கண்டுபிடித்து தண்டிப்பது தீர்வாகாது என்பதால் இரண்டு நிலங்களைப் பிரிக்கும் ஒற்றைச் சுவரில் உடைப்பொன்றை ஏற்படுத்தும் கலகக்காரனாய்ச் செயல்படுவதே இக்கட்டுரையாளனின் நோக்கம்.

தென் இந்திய சினிமாக்களில் அதுவும் குறிப்பாக தமிழ் சினிமாக்களில் காலம் காலமாக அல்ல, சரியாக சொல்வதானால் 1995க்குப் பிறகு இஸ்லாமியர்கள் பல்வேறு படைப்பாளிகளால் தவறாகவும் மிகையாகவும் புண்படும் வண்ணமும் கேலிப் பொருட்களாகவும் எதிர்மறைப் பாத்திரங்களாகவும் சித்தரிக்கப்படுவது அண்மையில் வெளியான வானம் (தெலுங்கு வேதம் படத்தின் மீள்வுருவாக்கம்) வரை தொடர்வது பலரும் எழுதிவரும் தொடர்கதை. இதற்கொரு முற்றுப் புள்ளி வேண்டும் என யாருமே எண்ணாமல் இருப்பதற்கும், ஏன் திரைத்துறையிலேயே இயங்கக் கூடிய இஸ்லாமியர்களும், மதப்பாரபட்சமற்றவர்களும் ஏன் முயல்வதே இல்லை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்திய நிலத்தில் இஸ்லாமியர்களும் மற்ற சமய சமூகத்தை சேர்ந்தவர்களும் மிகச்சரியான புரிதல்களுடன் வாழ்ந்து வந்தது பெருவரலாறு. ஆனால் காந்தியைக் கொன்றழித்த இந்திய தேசத்தின் புதல்வர்கள் ஆளவந்தார்களாக மாறிய வரையிலும் அந்தப் பெருவரலாற்றின் அமைதி தொடர்ந்து தான் வந்தது. பொதுச்சூழலில் என்றைக்கு குண்டுவெடிப்புகளும் உலகளாவிய நிகழ்வுகளில் பல செயல்களும் செய்திகளும் முஸ்லிம்களை சம்மந்தப்படுத்தி வரத் தொடங்கினவோ அன்றைக்கு பிடித்தது சனி.

நான் முஸ்லிம்களில் குற்றவாளிகள் இல்லவே இல்லை என கூறவரவில்லை. முஸ்லிம்கள் என்றாலே குற்றவாளிகள், குண்டுவைப்பவர்கள் என்று கற்பிதம் செய்ய முனையும் ஆதிக்கசக்திகளை துதி பாடி எடுக்கப்படும் திரைப்படங்களைச் சாடுவதே என் நோக்கமாகிறது. எந்த இனத்தில் அல்லது எந்த மதத்தில் குற்றவாளிகள் இல்லாமல் இருக்கிறார்கள்..? எந்த இனத்தை சேர்ந்த அல்லது மதத்தைச் சேர்ந்தவர்கள் முழுக்க நல்லவர்கள் என மார் தட்டிக்கொள்ள முடியுமா..? அங்கனமே முஸ்லிம்களையும் அவர்களில் அங்குமிங்கும் இருக்கும் குற்றவாளிகளை குற்றச்செயல் புரிந்தவர்களை நாம் பார்க்க வேண்டும் என்பது தானே நியாயமாக இருக்க முடியும்..?

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டியோ இல்லையோ, உலகுக்கே இளைத்தவர்கள் முசல்மான்கள்.

அவர்கள் செய்யக்கூடிய கொடுஞ்செயல்கள் என்னென்ன..?

அரபியும் உருது பேசுகிறார்கள், தரையில் வீழ்ந்து தொழுகை புரிகிறார்கள், கூட்டம் கூட்டமாக வாழ்க்கை நடத்துகிறார்கள், புத்தகங்கள் அச்சிடுகிறார்கள்.. படிக்கிறார்கள் பேசுகிறார்கள், இன்னமும் இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என நம்பிக்கொண்டு இங்கேயே இருக்கிறார்கள்.

குழந்தைத் தனமாய் இருக்கிறது. இரண்டு தரப்பாரை எப்பொழுதும் பதற்றத்திலேயே வைத்திருப்பதில் பதவிக்குளிர் காய்கிற அரசியல்வாதிகளும், மதவாதிகளும், இந்த இரண்டு தரப்பாரைச் சார்ந்து பிழைப்பு நடத்தும் அடிவருடிகளும் தவிர பொது மக்கள் இன்னமும் எந்த மதமாயினும் சரி, இணக்கமாக, அந்நியோன்னியமாகத் தான் வாழ்கின்றார்கள்..


இனி சினிமாவுக்கு வருவோம். அடிதடிப் படமாயினும் அரசியல் படமாயினும் சரி... ஊறுகாய் முஸ்லிம்கள் தான். முஸ்லிம்கள் குண்டு வைப்பவர்களாகவும், உருது பேசுகிறவர்களாகவும், தொழுகை புரிபவர்களாகவும், வெளிநாட்டுத் தீவிரவாதிகளாகவும், குண்டடிபட்டு அல்லது குத்துப் பட்டு சாகிறவர்களாகவும் தொடர்ந்து பிம்பமாக்கப்படுகிறார்கள். எந்த வித உலகளாவியப் பார்வையோ அல்லது புரிதலோ அன்றி எடுத்தேன் கவிழ்த்தேன் என எடுக்கப்படுகின்ற படங்களில் தொடர்ந்து சிறுபான்மை முஸ்லிம்கள் கொடுமைக்குட்படுத்தப்படுகின்றனர்.

சமீபத்திய வானம்... இதில் ப்ரகாஷ்ராஜ் நல்ல முஸ்லிம். அவர் தம்பி தீவிரவாதி. குண்டு வைப்பவன்.

ரஜினிகாந்தின் சிவாஜியில் ஹவாலா செய்பவர் ஒரு பாய். (சூப்பரு). உன்னைப் போல் ஒருவனில் கமல் செய்தது பெரும் துரோகம். அவரது குருதிப்புனல் படத்தில் அர்ஜுன் முஸ்லிம். கமல்

15ம் பக்கம் பார்க்க...

# உலகப் புகழ்பெற்ற ஓவியர் எம்.எப்.ஹுஸைன் மறைவு



உலகப் புகழ் பெற்ற இந்திய ஓவியர் மக்புல் ஃபிதா ஹு"ஸைன் புதனன்று காலமாகிவிட்டார். லண்டனில் ராயல் பிராம்ப்டன் மருத்துவமனையில் மாரடைப்பால் காலமான அவருக்கு வயது 95. 1915இல் மகாராஷ்டிரா மாநிலத்தில் பிறந்த அவர், 1937இல் மும்பையில் சினிமா பேனர்கள் எழுதும் பணியில் சேர்ந்து தன் கலைவாழ்வைத் துவக்கியவர். 1947 இல் அவர் 'முற்போக்குக் கலைஞர்கள் குழு' வோடு இணைந்து பணியாற்றத் துவங்கியதற்குப் பிறகே அவர் கலை உலகில் ஓர் மகத்தான ஓவியராக அடை யாளம் காணப்பட்டார். உலக அளவில் பிகாசோவோடு சமமாக வைத்துப் புகழப்பட்டவர் இந்திய ஓவியக் கலைஞர் 'ஹு{ஸைன் மட்டும்தான். 1966 இல் பத்மஸ்ரீ விருதும், 1973இல் பத்மபூஷன் விருதும், 1989இல் பத்மவிபூஷன் விருதும் பெற்றார். மாநிலங்களவை உறுப்பினராகவும் செயல்பட்டுள்ளார்.

இந்திய ஓவிய மரபிலிருந்து நிர்வாண வடிவில் சித்திரம் தீட்டுவதை ஒரு பாணியாகக் கொண்டிருந்தார். அதற்காக உலகெங்கும் பாராட்டுப்பெற்றார். ஆனால் இந்துத்துவ சக்திகள் அவர் வரைந்த சரஸ்வதி கோட்டோவியத்துக்காக அவரையும் அவரது படைப்புகளையும் தாக்கியது. தொடர்ந்து அவருடைய படைப்புகள் தாக்கி அழிக்கப்பட்டன. கொலை மிரட்டல் இருந்து கொண்டே இருந்தது. சர்வதேச மனிதரான அவரை இஸ்லாமியர் என்கிற ஒற்றை அடையாளத்துக்குள் அடைக்க முயன்றார்கள். ஆகவே அவர் இந்தியாவில் தங்கியிருந்து தன் படைப்புச் செயல்பாட்டைத் தொடர முடியாத மனநெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டார். 14 ஆண்டுகளுக்கு முன்னர் தன்னைத் தானே நாடு கடத்திக்கொண்ட அவர் மீண்டும் தன் தாயகம் திரும்பவே இல்லை..

இந்தியாவின் அடையாளமாக உலகம் அங்கீகரித்த அவர், தன் இறுதிக் காலத்தில் நாடற்றவராக வாழ நேர்ந்தது. கத்தார் நாடு மனமுவந்து அவருக்குத் தன் நாட்டுப் பிரஜை என்ற அங்கீகாரத்தை அளித்தது.


"நான் என் தாய்நாடான இந்தியாவை நேசிக்கிறேன். ஆனால் என் தாய்க்கு நான் வேண்டாதவனாகி விட்டேன். எனக்காகக் குரல் கொடுக்க அங்கு யாரும் இல்லை " என்று மலையாளத் தினசரி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார். பின்னர் இந்தியாவில் நடைபெற்ற சில சர்வதேச ஓவிய நிகழ்வுகளுக்கு அவரை வரவழைக்க கலைஞர்கள் பெருமுயற்சி எடுத்த போதும் இந்திய அரசு உதவத்தயாராக இல்லை. அவரை மீண்டும் நாட்டுக்குக் அழைத்துவர காங்கிரஸ் அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று தமுஎகச மாநிலத்தலைவர் அருணன், பொதுச் செயலாளர் ச.தமிழ்ச்செல்வன் ஆகியோர் வெளியிட்டுள்ள அச்செய்தியில் கூறியுள்ளனர்.



A key lot is by M.F. Hussain, the Indian artist, resident in Doha and London. - Photo: Bonhams

அவருடைய மறைவுக்கு ஆழ்ந்த அஞ்சலி செலுத்தும் இந்த வேளையில் அவருடைய உடலை இந்தியாவுக்குக் கொண்டு வந்து அரச மரியாதையுடன் அடக்கம் செய்து, அவர் வாழ்ந்த காலத்தில் செய்யத் தவறியதை இப்போதாவது செய்ய வேண்டும் என்றும் மத்திய அரசை வற்புறுத்தியுள்ளனர். இதனையடுத்து, ஓவியர் எம். எப். ஹுஸைனின் உடலை இந்தியாவுக்குக் கொண்டுவந்து இறுதிச் சடங்குகளைச் செய்ய அவரது குடும்பத்தினருக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. 95 வயதான எம். எப். ஹுசைன் உடலநலக்குறைவு காரணமாக லண்டனில் ரோயல் பிராம்ப்டன் மருத்துவமனையில்' காலமானார்.

# கொழும்பு தூத்துக்குடி



# கப்பல் சேவை ஆரம்பம்

முன்னர் பல எதிர்பார்ப்புக்கள் நிலவியதுடன், அதனை ஆரம்பிப்பதில் இழுபறி நிலை காணப்பட்டது. இந்நிலையில், தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் இருந்து தூத்துக்குடி கொழும்பு இடையேயான கப்பல் போக்குவரத்து ஜுன் 13ம் திகதி 3.15 மணியளவில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. தூத்துக்குடி வ.ஊ.சி துறைமுகத்தில் நடைபெற்ற நிகழ்வில் இந்தியாவின் கப்பல்துறை அமைச்சர் ஜீ.கே.வாசன் கொடி அசைத்து முதலாவது பயணிகள் கப்பல்சேவையை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் எம்.பிக்கள் நெல்லை தொகுதி ராமசுப்பு, தூத்துக்குடி தொகுதி ஜெயதுரை, துறைமுக கழக தலைவர் சுப்பையா, மற்றும் அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த கப்பலில் நல்லெண்ண தூதுவர்கள் 80 பேர், 121 பயணிகள் உள்பட 201 பேர் பயணம் செய்தனர். இந்தியாவின் கப்பல்துறை அமைச்சர் ஜீ.கே.வாசன் நிகழ்வில் உரையாற்றுகையில், இதே போன்று ராமேஸ்வரம் தலைமன்னார் இடையே கப்பல் போக்குவரத்து துவங்குவதற்கு ஆரம்ப கட்ட பணிகள் துவங்கி விட்டதாகவும் பணிகள் முழுமையாக முடிந்த பின்னர் விரைவில் இயக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

இந்தக்கப்பல் திங்கள், வெள்ளிக்கிழமைகளில் தூத்துக்குடியில் இருந்தும், புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்புவில் இருந்தும் புறப்படும். இந்தச் சேவையில் ஈடுபடவுள்ள ஸ்கொட்டியா பிறின்ஸ் என்ற பயணிகள் கப்பலில் 1044 பேர் பயணம் செய்ய முடியும். இதில் 307 அறைகள் உள்ளன. ஆரம்பத்தில் இந்தக் கப்பல்சேவை வாரத்தில் இரண்டு நாட்கள் இடம்பெறும்.

இந்தக் கப்பலில் பயணிகளுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 40 கப்பல் பணியாளர்கள் பணியாற்றுவர். மேலும் 25 பணியாளர்கள் குடிவரவு, சுங்க, மற்றும் சோதனைகளில் அதிகாரிகளுக்கு உதவும் பணியில் ஈடுபட்டுள்ளனர். 300 தொன் எடையுள்ள பொருட்களை சுமந்து செல்லும் வசதி கொண்ட இந்தக் கப்பலில் 111 சாதாரண வகுப்பு அறைகள் உள்ளன.

கழிவறைகளுடன் கூடிய 22 அறைகளும், கழிவறைகள் மற்றும் குளிக்கும் வசதிகளைக் கொண்ட 169 சொகுசு அறைகளும், 11 முதல்தர அறைகளும இந்தக் கப்பலில் உள்ளன. சிற்றுண்டிச்சாலை, உணவகம், சூதாட்ட விடுதி, மதுபானசாலை, மற்றும் தீர்வையற்ற கடை என்பன போன்ற வசதிகளும் இந்தக் கப்பலில் இருக்கும்.

தனிநபர் ஒருவருக்கு சாதாரண படுக்கைக்கு 2990 இந்திய ரூபாவும், சொகுசு படுக்கைக்கு 2588 இந்திய ரூபாவும், உயர்சொகுசு படுக்கைக்கு 2760 இந்திய ரூபாவும், முதலாம் தர அறையொன்றின் படுக்கைக்கு 10,350 இந்திய ரூபாவும் கட்டணமாக அறவிடப்படவுள்ளதாக இந்திய நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தியா - இலங்கைக்கு இடையிலான கப்பல் சேவையைக் காட்டிலும் சில விமான சேவைக் கட்டணம் குறைவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. கட்டணக் கொள்கையை வகுத்த கப்பல் முதலாளிமாரும் மத்திய அரசும் சாதாரண மக்களைக் கருத்தில் கொள்ளவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது...


# துருக்கியில் இஸ்லாமிய அரசியல் தளம் மீண்டும் வெற்றி பெற்றுள்ளது




துருக்கியில் அண்மையில் இடம்பெற்ற 17 வது பாராளுமன்ற தேர்தலில் பிரதமர் எர்டோகன் தலைமையிலான நீதிக்கும் அபிவிருத்திக்குமான AKP கட்சி மூன்றாவது தடவையாகவும் வெற்றிபெற்றுள்ளது. துருக்கியில் 52,758,907 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தார்கள். இவர்களில் 43,912,170 வாக்காளர்கள் வாக்குகளை பயன்படுத்தியுள்ளனர். இவர்களில் 42,972,665 பேரின் வாக்குகள் செல்லுபடியானதாக ஏற்றுகொள்ளப்பட்டது. அதில் 93,9505 பேரின் வாக்குகள் செல்லுபடியற்றதாக நிராகரிக்கப்பட்டுள்ளது துருக்கியின் மக்கள் தொகை 78,785,548 என்பதும் இடம்பெற்ற தேர்தல் மூலம் மொத்தம் 550 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிபிடத்தக்கது.

கடந்த 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இரண்டாவது தடவையாகவும் ஆட்சியில் இருக்கும் இஸ்லாமிய பின்னணியைக் கொண்டுள்ள நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி கடந்த முறை 2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் 46.66 வீதமான வாக்குகளை பெற்று 341 ஆசனங்களைக் கைப்பற்றியது. இந்த முறை 49.95% வீதம் வரையான வாக்காளர்களின் ஆதரவை பெற்று தனது வாக்குவங்கியை விரிவுபடுத்தியுள்ளது எனினும் துருக்கியின் தேர்தல் முறை கட்சிக்கு 326 ஆசனங்களை மட்டும் பெற்றுகொடுதுள்ளது.




துருக்கியின் முக்கிய எதிர்கட்சியான மதச்சார்பற்ற குடியரசுக் கட்சியான CHP 25.33% வாக்குகளை பெற்று 135 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. கடந்த முறையுடன் ஒப்பிடும்போது இந்த கட்சியின் வாக்கு வங்கியும் சற்று அதிகரித்துள்ளது. கடந்த முறை 20.85 வீதமான வாக்குகளை பெற்றிருந்த இக்கட்சி இந்த முறை 25.33% வாக்குகளை பெற்று தனது வாக்கு வங்கியை விரிவாக்கியுள்ளது.

மற்றுமொரு எதிர்கட்சியான வலது சாரி தேசியவாத கட்சியான MHP 13.33% வாக்குகளை பெற்று 53ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. கடந்த முறையுடன் ஒப்பிடும்போது இந்த கட்சியின் வாக்கு வங்கி இழப்புகளை கண்டுள்ளது. கடந்த முறை 14.29 வீதமான வாக்குகளை பெற்றிருந்த இக்கட்சி இந்த முறை 13.33% வாக்குகளைப் பெற்று தனது வாக்காளர்களை இழந்துள்ளது.

அதேவேளை அறுபதற்கும் அதிகமான சுயேற்சை குழுக்கள் 6.05% வாக்குகளைப் பெற்று 36 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. இவை குறிப்பாக துருக்கியின் சர்ச்சைக்குரிய பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் குர்திஷ் சமாதானம் மற்றும் சமாதானத்துக்கான சுயேற்சை குழுக்களை கொண்டது என்பது குறிபிடத்தக்கது.

நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் ஆட்சிகாலத்தில் துருக்கி பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளது. உலகில் சீனாவுக்கு அடுத்ததாக அல்லது அதற்கு நிகராக மிகவும் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதரத்தை கொண்ட நாடாக உருவெடுத்துள்ளது. துருக்கியின் ஆள்வீத வருமானம் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. இவற்றுக்கு மேலாக இஸ்லாமிய கோட்பாடுகளைக் கொண்டு செயல்படுவதே இந்த கட்சி மூன்றாவது தடவையாகவும் மக்களால் தெரிவு செய்யப்படக் காரணமாக அமைந்துள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.


தேர்தல் பிரசாரத்தின் போது பிரதமர் தமக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தருமாறு மக்களிடம் கேட்டுகொண்டார். ஆனால் தனது வாக்கு வங்கியை பெரிதும் அதிகரித்துள்ள நிலையிலும் அவரது கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறவில்லை.

ஆனாலும் பிரதான மூன்று எதிர் கட்சிகளின் ஆதரவுடன் 30 ஆண்டு கால இராணுவ தலையீடுகளைக் கொண்ட துருக்கிய யாப்பை மாற்றமுடியும், துருக்கிய மக்களுக்கு முழுமையான சுதந்திரத்தை வழுங்க முடியும், அது தவறும் பச்சத்தில் நேரடியாக மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாக அதனை செய்து விடமுடியும் என்று கட்சி தெரிவித்துள்ளது. இந்த கட்சியின் மூன்றாவது வெற்றி இஸ்லாமிய எழுச்சின் முக்கிய ஒரு அங்கமாகப் பார்க்கப்படுகின்றது.

இஸ்லாமிய கிலாபத் இறுதியாக அழிக்கப்பட்ட தேசத்தில் இஸ்லாம் எழுச்சி பெறுவது முஸ்லிம் உம்மாஹ்வுக்கு மிகவும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

ஆளம் நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி எகிப்து இஹ்வானுல் முஸ்லிமீன் இயக்கத்துடன் மிகவும் நெருக்கமான உறவை கொண்டுள்ளதாகவும் அதை புலனாய்வு செய்துகொண்டிருந்த இரண்டு புலானய்வு செய்தியாளர்களை அல்லது மேற்குலகின் உளவாளிகளை எர்டோகன் அரசாங்கம் கைது செய்துள்ளது என்று அண்மையில் துருக்கி எதிர்கட்சி பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியமை குறிபிடத்தக்கது.

# துக்ளக் ஆசிரியத் தலையங்கம்




இலங்கைப் பிரச்னை தொடர்பாக தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்ற நாடுகளுடன் பேசி இலங்கை மீது பொருளாதார தடை விதிப்பதற்கு இந்தியா முனைய வேண்டும் என்று கூறுகின்றது. இந்த மற்ற நாடுகள் என்பதில் நிச்சயமாக சீனா இடம் பெறாது. சீனா ஏற்காமல் இது நடக்கவும் நடக்காது. அப்படியே நடப்பதாக இருந்தால் கூட இலங்கையில் சீனா முழுமையாக நுழைந்துவிட இது வழி செய்து விடும். அது இந்தியாவிற்கு நல்லதல்ல.




இலங்கையில் நடந்தது போர் அல்ல .தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை. இதை போர் என்று கூறமுடியாது என்பதால் அங்கு போர்க்குற்றவாளியாக யாரையும் அறிவிக்கமுடியாது என்பதும் சிவிலியன் மக்களிடையே தீவிரவாதிகள் புகுந்து கொண்டு அவர்களைக் கேடயமாகவும் பாதுகாப்பு அரணாகவும் பயன்படுத்துகின்றபோது தீவிரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் சிவிலியன்களின் உயிரிழப்பு பெரிய அளவில் தவிர்க்கமுடியாதது என்பதும் நமது கருத்து. (இந்தியாவின் பிரபல சஞ்சிகையான துக்ளக் சஞ்சிகையின் ஆசிரியர் சோ அவர்கள் ஆசிரியத் தலையங்கத்தின் எச்சரிக்கைப் பகுதியில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்)

நன்றி – துக்ளக்

# காலம் கடந்த நீதி - யுத்தக் குற்றவாளிகளுக்கு எதிரான யுத்தம்











நெதர்லாந்தின் ஷெவனிங்கன் நகரம் வழமைக்கு மாறான பரபரப்புடன் காணப்பட்டது. இந்த நகரத்தில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சிறைச்சாலைச் சூழல் ஊடகர்களாலும் பொதுமக்களாலும் நிறைந்திருந்தது. வானத்தில் பறந்த வெளிர்நீல ஹெலிகப்டர் அதன் இரைச்சலை விடவும் அதிகமான மக்களின் இரைச்சலில் தரையிறங்கியது. உலகம் 16 வருடங்களாக வலைவிரித்துத் தேடிய ஒருவர் அந்தஹெலிகப்டரில் அழைத்து வரப்பட்டமைதான் அந்த பரபபரப்புக்குக் காரணம்.

அவரின் பெயர் ஜெனரல் ரட்கோ மெலடிச் - பொஸ்னியாவில் 1995 ஆம் ஆண்டு சுமார் 7500 முஸ்லீம்களைப் படுகொலை செய்வதற்கு காரணமானவராகக் கருதப்படுபவர்தான் இந்த மெலடிச். வடக்கு சேர்பியாவின் லாசாரெவு என்ற கிராமத்தில் வைத்து கடந்த மே 16ம் திகதி சேர்பிய பொலிசாரால் கைது செய்யப்பட்ட ஜெனரல் மெலடிச் சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்ற விசாரணைகளுக்காவே நெதர்லாந்திற்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவில் இடம்பெற்ற பாரிய இன அழிப்பின் சூத்திரதாரிகளில் ஒருவராக மெலடிச் கருதப்படுகின்றார். பொஸ்னிய படுகொலைகள் என அழைக்கப்படும் இன அழிப்பினை நேரடியாக வழிநடத்தியவர் அவர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதற்கு அனுமதி வழங்கிய பொஸ்னிய சேர்பிய அரசியல் தலைவரான ரடோவன் கரடிச் மற்றும் மறைமுகமாக இதனை ஊக்குவித்த சேர்பிய முன்னாள் ஜனாதிபதி ஸ்லபோடன் மிலோசவிச் ஆகியோர் ஏற்கனவே கைதாகி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் மெலடிச்சின் கைது இடம்பெற்றுள்ளது.

நெடுந்தொடர் ஒன்றின் ஒரு அத்தியாயமாக மெலடிச்சை கருத முடியும். ஆனால் பல குழப்பகரமான முடிச்சுகள் கொண்ட பொஸ்னியாவின் கதையை முழுமையாக புரிந்து கொள்வதற்கான ஒரு முயற்சிதான் இந்த கட்டுரை.

பொஸ்னியா என்பது ஐரோப்பாவில் மிக மோசமான இனப் போராட்டத்தை தொடர்ச்சியாக சந்தித்து வரும் ஒரு நாடு. இதன் பிரதான இனக்குழுமங்கள் மூன்று. அவை மூன்றும் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்கான போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றன.

பெரம்பான்மையினராக இஸ்லாத்தை பின்பற்றும் முஸ்லீம்களும் (40%) சிறுபான்மையிராக கிரேக்க பின்னணி கொண்ட சேர்பியர்கள் (32%) மற்றும் க்ரோட்கள் (18%) எனப்படும் ரோமன் கத்தோலிக்கர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். 1918ம் ஆண்டு முதலாவது உலக மகா யுத்தத்தை அடுத்து யுகோஸ்லாவியா என்ற கூட்டு அமைக்கப்பட்டது. அதில் பொஸ்னியா, மொன்ரிநிக்ரோ, ஸ்லோவேனியா, க்ரோஷியா, மாசிடோனியா ஆகிய நாடுகள் அங்கம் வகித்தன.

1946ல் யுகோஸ்லாவியா தனக்கான அரசியலமைப்பை உருவாக்கியது. மார்ஷல் டிட்டோ என்பவர் அதனை கம்யுனிசத்தின் பாதையில் பயணிப்பதற்கான பலமான நாடாக மாற்றும் முனைப்புகளை மேற்கொண்டார். மார்ஷல் டிட்டோ தலைமையில் தமக்கான விடியல் கிடைத்துவிடும் என்று அந்த மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனாலும் டிட்டோவின் மறைவைத் தொடர்ந்து நிலைமை தலைகீழாக மாறியது. கம்யுனிச கையிறுகளால் இறுக பிணைக்கப்பட்டிருந்த யுகோஸ்லோவியா என்ற கூட்டமைப்பு உடைந்து சிதறியது.

1991ல் க்ரோஷியா மற்றும் ஸ்லோவேனியா ஆகியன தம்மை சுதந்திர நாடுகளாக அறிவித்தன. அதனைத் தொடர்ந்து பொஸ்னியாவும் சுதந்திரப் பிரகடனம் செய்ய எத்தனித்து. அதன் போதுதான் பிரச்சினையும் வெடித்தது. பொஸ்னியா சேர்பியாவுடன் இணைந்திருப்பதே தமக்கு பாதுகாப்பானது என்று பொஸ்னிய சேர்பியர்கள் கருதினார்கள். அதனால் பொஸ்னியாவின் தனி நாட்டு பிரிவினைக்கு அவர்கள் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்த முற்பட்டனர். எனினும் பொஸ்னிய முஸ்லீம்கள் மற்றும் க்ரோஷியர்களின் பெரும்பான்மை ஆதரவோடு பொஸ்னியா தனிநாட்டு பிரகடனம் செய்து கொண்டது. சிறுபான்மையிராக இருந்த போதிலும் அயல் நாடானா சேர்பியாவின் ஆதரவுடன் பொஸ்னிய சேர்பியர்கள் முஸ்லீம்கள் மீதும் குரோஷியர்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டனர் சேர்பியாவின் முன்னாள் ஜானதிபதியான ஸ்லபோடன் மிலோசவிச் இந்த தாக்குதல்களை ஊக்கப்படுத்தினார். பொஸ்னியாவில் இருந்து முஸ்லீம்களையும் குரேஷியர்களையும் இனச் சுத்தீகரிப்பு செய்யும் நோக்கில் சேர்பியர்கள் கடும் தாக்குதல்களை நடத்தினார்கள். நிலப்பரப்புகளை கைப்பற்றுவதை விடவும் இன அழிப்பினையே அவர்கள் பிரதான நோக்கமாக கொண்டு செயல்பட்டமைக்கு பல்வேறு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இரண்டு மாதங்களில் பொஸ்னியாவின் மூன்றில் இரண்டு பங்கு நிலப்பகுதியயை சேர்பியர்கள் தம்வசப் படுத்தினார்கள். இதேவேளை குரோஷியாவின் ஆதரவுடன் பொஸ்னியாவில் இருந்து ஐந்தில் ஒரு பகுதி நிலத்தை குரோஷியர்கள் கைப்பற்றிக் கொண்டனர். ஐக்கிய நாடுகள் சபை “வழமை போலவே” இந்த விடயத்திலும் தனது கையாலாகத்தனத்தினால் சரியான தீர்வினை வழங்க முடியாமல் தத்தளித்து. இறுதியில் உலகக் காவல்காரனான அமெரிக்காவிடம் பொஸ்னிய விவகாரம் கொண்டு செல்லப்பட்டது

பிரச்சினைக்குட்பட்டவர்களை விடவும் அதற்கு தூண்டுகோலக இருப்பவர்களுடன் பேசுவதும் ஒப்பந்தம் போடுவதும் தீர்வாகும் என்று அமெரிக்கா கருதியது. அதனால் பொஸ்னியாவின் தலைவர் அலிஜா சேர்பிய ஜனாதிபதி ஸ்லபோடன் மிலோசவிச் மற்றும் க்ரோஷிய ஜனாதிபதி டுட்ஜ்மென் ஆகியார் அமெரிக்க அனுசரணையில் டேடனில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்தையில் கலந்து கொண்டனர்

பொஸ்னியாவின் 49 சதவீதத்தை சேர்பியர்களும் 51 சதவீதத்தை முஸ்லீம்கள், க்ரோஷியர்கள் மற்றும் ஏனைய பிரிவினருக்கும் பிரித்து தனியலகுககளாக வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது. பொஸ்னியா என்ற ஒன்றுபட்ட நாட்டிற்குள் இரண்டு தனியான குடியரசுகளாக அவை செயற்படும் என தீர்மானிக் கப்பட்டது. எனினும் எதனை எவ்வாறு பிரிப்பது என்பது தொடர்பிலும் பிரச்சினைகள் வெடித்தன. இத்தனை சிக்கல்களையும் தாண்டி அந்த நாட்டில் அமைதியை கொண்டு வருவதற்கான ஐநா அமைதிப் படையும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பொஸ்னிய யுத்தத்தில் மிக முக்கியமான யுத்தக் குற்றமாக கருதப்படும் ஸ்ரெப்னிகா படுகொலைகள் ஐநா மீதான குற்றச்சாட்டுகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது. அப்பாவி முஸ்லீம் மக்களை பாதுகாப்பதற்கான ஐநா அறிவித்த ஒரு இடம் தான் ஸ்ரெப்னிகா நகரம். அங்கு ஐநாவின் பாதுகாப்பு படைகள் நிலை கொண்டடிருந்தன. பொஸ்னியா முஸ்லீம் பகுதிகளை ஆக்கிரமதித்தவாறு முன்னேறிய பொஸ்னிய சேர்பிய படைகள் குறித்த நகரை அண்மித்த வேளை அங்கு பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்டிருந்த ஐநா அமைதிப்படை அந்த மக்களை கைவிட்டு விலகியது. இது முன்கூட்டியே இணக்கம் காணப்பட்டமைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட படை விலகல் என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. ஐநா படைகளின் வெளியேற்றத்தை அடுத்த அங்கு நுழைந்த மெலடிச்சின் படைகள் அங்கிருந்த முஸ்லீம்களில் சுமார் 7500 பேரை ஒரே தடவையில் சுட்டுக் கொன்றனர். இதனை தற்போது சேர்பிய அதிகாரிகள் ஏற்றுக் கொண்டும் உள்ளனர்.

ஐநாவின் அமைதிப்படையாக ஸ்ரெப்னிகாவில் நிலை கொண்டிருந்தவர்கள் நெதர்லாந்து இராணுவத்தினர். ஆனால் அவர்கள் இதுவரை தமது பின்வாங்கலுக்கான காரணம் குறித்தோ அல்லது அங்கு இடம்பெற்ற இன அழிப்பு குறித்தோ இதுவரை வாய் திறக்கவில்லை.

பொஸ்னிய படுகொலைகளின் நேரடிக் குற்றவாளியான ராட்கோ மெலடிச் மீதான விசாரணை நெதர்லாந்தில் நடைபெறுகின்றது. ராட்கோ தான் பலவீனமாக இருப்பதாக தெரிவித்துள்ளார். தனது உடலநலக் குறைவால் போர்க்குற்ற விசாரணையில் எதிர்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். பொஸ்னியா முஸ்லீம்களை இனப்படுகொலை செய்தது தொடர்பாக மிலாடிக் மீது 16 ஆண்டுகள் விசாரணை நடந்தது.

இந்த நிலையிலதான் ராட்கோ மிலாடிக் கடந்த மாதம் கைது செய்யப்பட்டார். அவர் மிகவும் பலவீனத்துடன் உள்ளார். 69 வயது முன்னாள் ஜெனரலின் உடல் நிலையைப் பரிசோதனை செய்ய டாக்டர்கள் தேவை என அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். ராட்கோ மிலாடிக் பதுங்கி இருந்த போது அவருக்கு இருமுறை மாரடைப்பு ஏற்பட்டது என வழக்கறிஞர் மிலோஸ் சாஜிக் தெரிவித்தார்.

சேர்பிய யுத்தக் குற்றங்களின் சூத்திரதாரி ஸ்லபோடன் மிலோசவிச் தண்டனை பெறுமுன்பே அவர் கதை முடிந்துவிட்டது. அதேபோல ராட்கோ மிலாடிக்கும் நீதிமன்றத் தீர்ப்பு வருமுன் மரணத்தை சந்தித்துவிடுவாரோ என்பதுதான் எல்லோர் மனதிலும் எழும் கேள்வியாகும்.

# பாம்புகளுடன் வாழ்க்கை




இந்தியாவில் உத்தரப் பிரதேஷ் மாநிலத்தில் கத்தம்பூர் கிராமவாசிகள் 8 வயது சிறுமியான காஜோல் கானைக் கண்டதும் வெருண்டோடுகிறார்கள். அவள் தனது கழுத்தை சுற்றியுள்ள நாகப் பாம்புகளுடன் ஊரைச் சுற்றுவதே அதற்குக் காரணம்.



55 வயதான காஜோலின் தந்தை தாஜ் முஹம்மத் கதம்பூரில் பிரபலமான பாம்பு பிடிப்பவராவார். இது தமது பரம்பரைத் தொழில் எனக்கூறும் அவர் தனது தந்தையும் அவரது தந்தையும்கூட இதே தொழிலைத்தான் செய்து வந்தனர் எனப் பெருமிதத்துடன் கூறுகிறார்.

தற்போது தனது மகனான குலாபிடம் தொழிலை ஒப்படைத்திருக்கும் தாஜ் முஹம்மத், தனது மகனைவிட தனது 8 வயதான இளைய மகளே இத்தொழிலில் இணைய மிக ஆர்வத்துடன் இருக்கிறாள் என்கிறார்.

பயங்கரமான நாகங்களுடன் நண்பர்களாகப் பழகும் கஜோலை பலமுறை பாம்புகள் தீண்டியுள்ளன. பலமுறை சாவின் வாசல்வரை சென்று பிழைத்து வந்திருக்கிறாள். என்றாலும் அவள் தனது நண்பர்களை விட்டுப் பிரிவதாயில்லை. பாடசாலை செல்லும்போதுகூட பாம்புகளைத் தன்னுடன் அழைத்துச் செல்லும் வழக்கத்தை அவள் கொண்டிருந்தாள். அதன் காரணமாக அவள் பாடசாலையிலிருந்தும் நீக்கப்பட்டாள். பாடசாலையை விட தனக்கு இந்தப் பாம்புகளே முக்கியம் என காஜோல் கூறுகிறாள். அவளது தந்தையும் அதனைப் பெருமையாகவே கருதுகிறார்.


தன்னையும் பாம்புகள் பலமுறை தீண்டியுள்ளதாகவும் அவற்றுக்கான மருந்துகள் மிக இரகசியமானவை எனவும் அவை காடுகளில் இலகுவாகக் கிடைக்கக்கூடியவை எனவும் தாஜ் கூறுகிறார்.


பாம்புகள் தீண்டியவுடன் லேசாக வலிக்கும், சில வேளைகளில் மிக வேதனையாகவும் இருக்கும் ஆனால் எனது தந்தை காட்டுக்குள் ஓடிச் சென்று மருந்துகளுடன் வந்து குணமாக்கிவிடுவார் என காஜோல் கூறுகிறாள்.

பாடசாலைப் படிப்பையும் துறந்த காஜோல் முழுநேரமும் பாம்புகளோடு விளையாடுவதும் அவற்றை சீண்டுவதுமாக காலத்தைக் கழித்து வருவதோடு குடும்பத் தொழிலின் அடுத்த வாரிசாகவும் உருவாகி வருகிறாள்.

# உலகின் மிகக் குள்ளமான மனிதர்







கொலம்பியாவைச் சேர்ந்த எட்வர்ட் நினோ ஹேர்னன்டஸ் என்ற 24 வயதையுடைய இந்த மனிதரின் உயரம் 70 செ.மீ. மட்டுமே. 10 கிலோ எடையுள்ள இவரே உலகின் மிகக் குள்ளமானவர் என கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. இவர் 2 வயதாகும்போதே இவரது வளர்ச்சி குன்றிவிட்டதாகவும் அதற்கான காரணத்தை இன்றுவரை வைத்தியர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் அவரது பெற்றோர்கள் கூறுகின்றனர்.

இவரைவிட 4 செ.மீ. உயரம் கூடிய சீனாவைச் சேர்ந்த ஹீ பிங்பிங் என்வரே உலகில் மிகக் குள்ளமானவர் எனப் பதியப்பட்டிருந்தது. ஆனால் தற்போது 56 செ.மீ. உயரமான கங்கேந்த்ரா தாபா மகர் எனற நேப்பாளிய சிறுவனே உலகின் மிகக் குள்ளமானவர் என்றும் ஆனால் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதியப்படுவதற்கு அவர் 18 வயதை எட்டும்வரை காத்திருக்க வேண்டும் எனவும் கூறப்படுகின்றது.


எட்வர்ட் நினோவின் இளைய சகோதரி ஒருவர் 93 செ.மீ. உயரமானவராகவும் ஏனைய 3 சகோதரர்களும் சராசரி உயரத்தையும் தோற்றத்தையும் கொண்டவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

தனது உயரம் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாத அவர் பொது இடங்களில் நடனமாடி பிழைப்பு நடத்துகிறார். தற்போது ஒரு சினிமாப்படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிட்டியுள்ளதாக அவர் கூறுகிறார்.

தொகுப்பு: ஜுமான் முஹம்மட்

# டெலஸ்கோப் உருவாகிய வரலாறு





1608-ம் ஆண்டு ஒரு முறை ஹாலந்து நாட்டில் ஹான்ஸ் லிப்பன்ஷி (ஜேன் லிப்பர்ஷை.) என்பவர் ஒரு கண்ணாடிக் கடை வைத்து நடத்தி வந்தார். அப்பொழுது அங்கு தனது எடுபிடி வேலைகளுக்காக ஒரு சிறுவனை பணியில் அமர்த்தி வேலை வாங்கி வந்தார். ஒரு நாள் ஒரு அவசர வேலை காரணமாக அந்த ஹான்ஸ் லிப்பன்ஷி என்பவருக்கு வெளியில் செல்லவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அப்பொழுது அந்த சிறுவனிடம் கடையை, தான் வரும்வரை பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

ஹான்ஸ் லிப்பன்ஷி சென்ற பின்பு அங்கு பணி செய்த சிறுவன் வேலைகளை நிறுத்திவிட்டு குறும்புகள் செய்து இன்றையப் பொழுதை கழிக்க திட்டமிட்டான். சிறிது நேரத்திற்குள் எல்லாம் அந்த குறும்புகளும் சலிப்புத் தட்டிப் போகவே, கடையில் விற்பனைக்கு வைத்து இருந்த சில கண்ணாடி வில்லைகளை எடுத்து ஒவ்வொன்றாக உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்து ஒரு உட்குவிந்த கண்ணாடி வில்லை ஒன்றை எடுத்து சற்று தூரத்தில் வைத்து தான் பணி புரியும் கடையின் அருகில் இருக்கும் ஒரு மாதா கோவிலை உற்று நோக்க தொடங்கினான். அப்பொழுது அவன் கண்ட காட்சி அவனை வியப்பின் உச்சத்திற்கு கொண்டு சென்றது. சந்தோஷத்தின் மகிழ்ச்சியில் வார்த்தைகள் எதுவும் பேசாமல் துள்ளிக் குதிக்கத் தொடங்கினான். காரணம் அவன் பார்த்த அந்த மாதக் கோவிலின் கோபுரம் அவனின் கண்ணின் பக்கத்தில் வந்து நிற்பதைப் போல் அந்தக் குவிந்தக் கண்ணாடி வில்லைகள் காட்டியது. அப்பொழுது யதார்த்தமாக ஹான்ஸ் லிப்பன்ஷி சென்ற பணி முடிந்து திரும்பி வந்துவிட்டார்.

அப்பொழுது சிறுவன் தான் கண்ட அதிசயத்தை அவரிடம் விளக்கி சொல்லவே அவரும் அந்த குவிந்தக் கண்ணாடியை வைத்து தினமும் தூரத்தில் இருக்கும் ஒவ்வொன்றையும் அருகில் பார்த்து ரசித்து வந்தார். இந்த விஷயம் நாளடைவில் இத்தாலிய விஞ்ஞானியான கலிலியோவின் காதிற்கு எட்டியது. உடனே கலிலியோ (Galileo) அந்தக் கடைக்கு சென்று அந்தக் கண்ணாடி வில்லையை வாங்கி அந்த தத்துவத்தை அறிந்து கொண்டார். பின்பு ஒரு உருண்டை வடிவிலான சிறிய பெட்டி ஒன்றை உருவாக்கி அந்தக் குவிந்த கண்ணாடி வில்லைகளை முன்னும் பின்னும் ஒவ்வொன்றாகப் பொருத்தி அவற்றை சற்று மேலும் கீழும் நகர்த்தி நகர்த்தி வித்தியாசமான மாற்றங்களைக் கண்டு வியந்தார். பின்பு அவற்றிற்கு ஒரு மாதிரி வடிவம் அமைத்து இறுதியாக டெலஸ்கோப் என்று பெயரிட்டார் அதுவே உலகில் தோன்றிய முதல் தொலை நோக்கியாகும்.

அதன் பின் தான் உருவாக்கிய அந்த தொலைநோக்கி மூலம் கடலில் மிதந்துகொண்டிருக்கும் ஒரு கப்பலை பார்க்கத் தொடங்கினார். அந்தக் கப்பல் அவர் கண்களுக்கு மிகவும் அருகில் தெரியத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து பெரிய டெலஸ்கோப் (telescope)



ஒன்றை உருவாக்கி தற்செயலாக அதனை சந்திரன் பக்கமாகத் திருப்பினார். அந்த நொடி முதல் வானவியல் ஆராய்ச்சியில் டெலஸ் கோப்பின் பங்கு தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிப்போனது என்று சொல்லலாம். சந்திரனை தான் உருவாக்கிய டெலஸ்கோப்பின் மூலம் பார்த்த கலிலியோ அதிர்ந்து போனார் காரணம் அதுநாள் வரை சந்திரன் மிகவும் மென்மையான பிரகாசம் நிறைந்த கோள் என்றுதான் சொல்லிக்கொண்டிருந்தது இந்த உலகம். அதற்கு மாறாக சந்திரன் கரடுமுரடான மலைகள் நிறைந்த கோள் என்று அன்றுதான் முதன் முதலாக இந்த உலகிற்கு தெரியவந்தது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

கலிலியோ கண்டுபிடித்த தொலைநோக்கியில் சில குறைபாடுகள் இருந்தது. புறம் குவிந்த கண்ணாடிகளை தொலைநோக்கியில் பயன்படுத்திப் பார்க்கும் பொழுது காட்சியில் தெரியும், உருவங்களின் பக்கத்தில் பல வண்ணங்கள் காணப்பட்டது அதனால் காட்சிகள் தெளிவாகத் தெரியாமல் இருந்தன.

இந்தக் குறையை சரி செய்ய கலிலியோவிற்கு பின்பு இங்கிலாந்து விஞ்ஞானியான சர் ஐசக் நியுட்டன் முயற்சி செய்தார். அப்பொழுது இந்தப் புறம் குவிந்த கண்ணாடியை பயன்படுத்தினால் இந்த குறைபாடுகள் தொடரத்தான் செய்யும் என்பதை உணர்ந்த நியுட்டன் அதற்கு மாறாக ஒரு கண்ணாடியை கண்டுபிடிக்க முயற்சி செய்தார் இறுதியில் முகம் பார்க்கும் கண்ணாடி போன்ற மாதிரி ரசம் பூசப்பட்ட கண்ணாடியை பயன்படுத்தி வெற்றி கண்டார். அதன் பின்புதான் இந்த உலகிற்கு குறைகள் எதுவும் இல்லாத முதல் தொலைநோக்கி உருவாக்கப்பட்டது. இத்தொலைநோக்கிகளுக்கு பிரதிபலிக்கும் தொலைநோக்கிகள் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதன் அடிப்படையில்தான் இன்றைய அனைத்து டெலஸ்கோப்புகளும் செயல்படுகிறது.

இது வரை உருவாக்கப்பட்டுள்ள டெலஸ்கோப்புகளில் அதிக சக்தி வாய்ந்தது பூமியில் இல்லை. அது விண்வெளியில் சுற்றிக்கொண்டு இருக்கிறது. அது தான் ஹப்பிள் டெலஸ்கோப். பூமியில் உள்ள டெலஸ்கோப்புகளை விட அளவில் சிறியதாக இருந்தாலும் அவை அனைத்தையும் விட அதிக சக்திவாய்ந்ததாகும்.

உலகிலேயே மிகப்பெரிய இராட்சத தொலைநோக்கி 18 மாடிக் கட்டிட உயர அளவில் ஆயிரம் டன் எடையுள்ளதாக இருக்கும். அதனால் தான் இதற்கு தி ஜெயன்ட் மெகல்லன் டெலஸ்கோப் என்று பெயரிட்டுள்ளனர்.

ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழகம் உட்பட 9 ஆராய்ச்சி நிறுவனங்கள் இணைந்து இதை வடிவமைத்துள்ளன. இதன் மூலம் பிரபஞ்சம் மற்றும் கறுப்பு துவாரத்தையும் நாம் காண முடியும். பிரபஞ்சத்தில் சூரிய குடும்பத்தையும் தாண்டி இதுவரை நாம் காணாத சில அரிய தகவல்களையும், விவரங்களையும் இந்த மெகல்லன் டெலஸ்கோப் மூலம் காண முடியும் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்

# அம்பானியின் ஆடம்பர வீடு!

உலகிலேயே மிகப்பெரிய வீடு எங்கிருக்கிறது தெரியுமா? நமது இந்தியாவில்தான்! மும்பை, அல்ட்டா மவுண்ட் சாலையில் உள்ள இந்த வீட்டின் சொந்தக்காரர் முகேஷ் அம்பானி ஆவார். 2007-ல் ரூ.4,400 கோடி மதிப்பில் கட்டுமான வேலைகள் துவக்கப்பட்டு, 2010 இறுதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஏசியன் கண்டெம்பொரரி எனும் அமெரிக்க நிறுவனம் இந்த வீட்டை கட்டித் தந்துள்ளது. இந்த வீட்டின் தற்போதைய மதிப்பு சுமார் ரூ.10,000 கோடியாகும். முகேஷ் அம்பானி 2011-ம் ஆண்டு உலக பணக்காரர்கள் பட்டியலில் 9 வது இடத்தை பிடித்துள்ளார்.. இவரின் இன்றைய சொத்து மதிப்பு 27 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும்.


மின் கட்டணம் ரூ.70 இலட்சம்


முகேஷ் அம்பானி தனது வீட்டிற்கு குடியேறியவுடன், முதல் மாதம் மின்சாரக் கட்டணமாக ரூ.70 இலட்சம் கட்டியுள்ளார். முதல் மாத மின்சார உபயோகக் கட்டணமாக ரூ.70 லட்சத்து 69 ஆயிரத்து 488 பில் வந்துள்ளது. இது 6 லட்சத்து 37 ஆயிரத்து 240 யூனிட் மின் சாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு நடுத்தர குடும்பத்தில் அதிகபட்சமாக பயன்படுத்தப் படும் சராசரி மின் அளவு 300 யூனிட் ஆகும். அம்பானியின் வீட்டு மின் பயன்பாட்டுடன் ஒப்பிட்டால் மலைக்கும் மடுவிற்கும் உள்ள இடைவெளியாகும். மின்சாரக் கட்டணத்தை சரியாக செலுத்திவிட்டதால் அம்பானிக்கு, ரூ.48 ஆயிரத்து 354 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாம். இதுபோகத்தான் அம்பானி ரூ.70 லட்சம் மின் கட்டணம் செலுத்தியுள்ளார்.

5 லட்சம் லிட்டர் தண்ணீர்

தினசரி இந்த வீட்டிற்கு மும்பை மாநகராட்சி நிர்வாகம் 5 இலட்சம் லிட்டர் தண்ணீர் விநியோகம் செய்து வருகிறது. முகேஷ் அம்பானியும் அவரது மனைவி மற்றும் மூன்று குழந்தைகளுடன் அவரது தாயார் உள்பட 6 பேர் மட்டும் இந்த வீட்டில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு சேவை செய்ய சுமார் 600 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வீட்டிற்கு 'ஆண்டிலா' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. 4532 சதுர அடி தரை பரப்பளவும், 4,00,000 சதுர அடி மொத்த பரப்பளவும் கொண்ட இந்த வீட்டின் உயரம் 570 அடியாகும். 60 தளங்களை அமைப்பதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டு, தற்போது 27 தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கட்டிடத்தில் மூன்று ஹெலிகாப்டர் தளங்கள் உள்ளன. விலை உயர்ந்த, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 168 கார்கள் உள்ளன. இவைகளை நிறுத்த வைப்பதற்கு இந்த வீட்டில் 6 தளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. எட்டாவது மாடியில் பொழுதுபோக்கிற்காக ஒரு மினி சினிமா தியேட்டரும் உள்ளது. மூன்று தளங்களில் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 4-ம் மாடியில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவில் நுழைந்தால் குளிர்காலத்தில் சூடாகவும், வெயில்காலத்தில் குளிராகவும் இருக்குமாம். 9-வது தளம் அவசர காலத்திற்கு பயன்படுத்த ஒதுக்கப்பட்டுள்ளது. 10, 11-வது தளங்கள் விளையாடுவதற்காகவும் உடற் பயிற்சிக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு நீச்சல் குளமும் உள்ளது. விருந்தினர்கள் தங்குவதற்காக இரண்டு தளங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. மேலே உள்ள நான்கு தளங்களில் முகேஷ் அம்பானியும் அவரது மனைவி நீத்தா மற்றும் மூன்று குழந்தைகளுடன் தாயார் கோகில பென் ஆகியோர் வசித்து வருகின்றனர். இந்த தளங்களிலிருந்து அரபிக்கடலின் அழகிய தோற்றமும், மும்பை நகரத்தின் எழிலையும் கண்டு ரசிக்கலாம். அதற்கு மேல் உள்ள இரண்டு தளங்கள் ஹெலிகாப்டர் இயக்குவதற்கான கட்டுப்பாட்டு அறைகளை கொண்டுள்ளது. மும்பை மாநகராட்சி நிர்வாகம் ஹெலிகாப்டர் இறங்குவதற்கு இன்னும் அனுமதி தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.






முகேஷ் அம்பானியின் வீட்டின் மதிப்பு 1 பில்லியன் அமெரிக்க டாலர் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது, உலக பணக்காரர் பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ள பில் கேட்ஸ் வீட்டின் மதிப்பு 100 மில்லியன் டாலர். இந்திய நாட்டின் இன்னொரு பணக்காரரும் உலக பணக்காரர் பட்டியலில் இடம் பெற்றவருமான லட்சுமி மிட்டல், கடந்த ஆண்டு லண்டனில் 60 மில்லியன் டாலர் மதிப்பில் ஒரு வீடு வாங்கியுள்ளார். முகேஷ் அம்பானி இவ்வளவு செலவு செய்து இப்படி ஒரு வீட்டை கட்டியிருக்க வேண்டிய அவசியமில்லை என்று இந்திய நாட்டின் பெரும் பணக்காரரான ரத்தன் டாடா கருத்து தெரிவித்துள்ளார். உலகம் முழுவதும் பேசப்படக் கூடிய ஒரு விஷயமாக இன்று அம்பானியின் ஆடம்பர வீடு அமைந்துள்ளது

இந்த அம்பானிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தான் இந்திய அரசு, பொருளாதார நெருக்கடி என்ற காரணத்தைக் காட்டி சில ஆண்டுகளுக்கு முன்னர் கோடிக்கணக்கான ரூபாயை மீட்புத் தொகையாக வழங்கியுள்ளது.

அம்பானியின் இந்த பிரம்மாண்டமான வீடு இந்திய நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக இல்லை. மாறாக இந்திய நாட்டில், வறுமைக் கோட்டிற்கு கீழ், மக்கள் தொகையில் சரி பாதிக்கும் மேல் உள்ள மக்களின் வறுமைக்கு காரணமாக விளங்குகிறது.

# முஸ்லிம்களின் கல்விக் கண்களைத் திறந்த



இந்த நாட்டின் கல்வி வரலாறு, முஸ்லிம்களின் வரலாறு, சமூக வரலாறு என எதை எடுத்துக்கொண்டாலும் கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் பங்கு பளிச்செனப் புலப்படும் அளவுக்கு, அன்னாரது சேவைகள் அளப்பறியதாகவும் பெறுமதி மிக்கதாகவும் காணப்படுகின்றது. அவரது சேவை காரணமாக இன்றுவரை மாணவ சமுதாயம் மட்டுமன்றி இந்த நாட்டின் அனைத்து மக்களும் நன்மையடைந்து வருகின்றனர் என்றால் அது மிகையாகாது.


சுமார் ஒரு நூற்றாண்டுக்கு சற்று குறைவான காலம்வரை வாழ்ந்து மறைந்த சிந்தனையாளரும் இராஜதந்திரியும் கல்விமானும் அரசியல்வாதியுமான பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் வாழ்வும் பணியும் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மட்டுமன்றி எமது நாட்டின் தேசிய வரலாற்றிலும் ஒரு முக்கிய பகுதியைத் தழுவிச் செல்கின்றது. சமூக மேம்பாட்டுக்காக உழைத்த பெருந்தகைகளின்

# கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்

வரிசையில் முன்னணியில் இடம் பிடித்த அவர், அவருக்குப் பின்வந்தோருக்கும் ஒரு உதாரண புருஷராக விளங்கினார்.

இலங்கை வரலாற்றின் தலைவிதியையே மாற்றியமைத்த மாபெரும் வீரர்களையும் சிந்தனையாளர்களையும் அரசியல் தலைவர்களையும் ஈன்றெடுத்த ருஹுனையே இவரினதும் பிறப்பிடமாகும். மாத்தறையில் ஆரம்பக் கல்வியை கற்ற அவர் உயர் கல்விக்காக கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் இணைந்த பின்பே சமூக உணர்வு மிக்க அவரது எதிர்காலவாழ்வு வடிவமைக்கப்பட்டது எனலாம். ஸாஹிராக் கல்லூரியின் சுழல்தான் அவரது பிற்காலப் பணிகளை நெறிப்படுத்தி தன்னலம் கருதாத ஒரு சேவை மனப்பான்மையை அவருள் தோற்றுவித்தது. அத்துடன் ஸாஹிராவில் அவர் மாணவராகக் கழித்த காலமே அவரது ஆளுமையின் வளர்ச்சியில் கணிசமான பங்கை வகித்தது. இதுவே, தான் கற்ற கொழும்பு ஸாஹிராக் கல்லூரியையும் கற்பித்த கம்பளை ஸாஹிராக் கல்லூரியையும் பிற்காலத்தில் கண்ணெனக்காத்து தீவிலேயே தலைசிறந்த கல்விக்கூடங்களாக மாற்றும் அவரது கனவை நனவாக்கியது. அவருடைய பரந்த ஆளுமை, உறுதிமிக்க சமூகப்பற்று என்பன, தேசிய அளவில் தம்மை இணைத்து சமூக வாழ்வில் காலூன்றி நின்று தேசிய இன உணர்வுகளுக்கும் சமூக உணர்வுகளுக்குமிடையில் அற்புதமான ஒரு இணக்கத்தைக் காண்பதில் அவருக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது. அவரது குடும்பப் பாரம்பரியமும் கல்விப் பின்னணியும் பரந்த அனுபவமும் இந்த உயர் பணிக்குக் களம் அமைத்துக் கொடுத்தது.

1931ல் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் மேற்படிப்புக்காக அலிகார் பல்கலைக் கழகத்தில் இணைந்தார். இக்காலப்பகுதி இந்தியாவில்



சுதந்திர தாகமும் தேசிய உணர்வும் மக்களிடையே கொழுந்துவிட்டு எரிந்த காலப்பகுதியாகும். முதன்மையூக்கம் மிகக் கொண்ட பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் அங்கும் பல சாதனைகளைப் புரிந்து நமது நாட்டுக்கும் சமூகத்திற்கும் பெருமை டேித்தந்தார். அக்காலத்தில் பிரபலமான அலிகார் சஞ்சிகையினதும் அலிகார் பல்கலைக் கழக பொன்விழா மலரினதும் ஆசிரியராக விளங்கிய முதல் வெளிநாட்டவர் என்ற பெருமையை அவர் பெற்றார். அப்பொன்விழா மலருக்கு அன்று செய்தி அனுப்பியவர்களுள் மகாத்மா காந்தி, அல்லாமா இக்பால், ரவீந்திரநாத் தாகூர் போன்றோரும் அடங்குவர். எழுத்துத் துறையில் மட்டுமன்றி பேச்சாற்றலிலும் அவர் சிறந்து விளங்கினார். இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான பேச்சுப் போட்டியொன்றில் அலிகார் சார்பில் போட்டியிட்டு தங்கப்பதக்கத்தை வென்றெடுத்தது மட்டுமன்றி 1935ல மலேஷியாவில் தேசிய ரீதியாக நடைபெற்ற மீலாத் விழாவொன்றில் பிரதம பேச்சாளராகவும் அழைக்கப்பட்டார். 1935ல் அலிகார் பல்கலைக் கழக மாணவர் சம்மேளனத் தலைவராகவும் பின்னர் பிராந்திய பல்கலைக் கழக மாணவர் சம்மேளனத் தலைவராகவும் பணியாற்றியதோடு 1936ல் அகில இந்திய பல்கலைக் கழக மாணவர் சம்மேளனம் உருவாவதற்கும் முக்கிய காரணகர்த்தாவாக விளங்கினார். இவ்வியக்கம் இந்திய சுதந்திரப் போராட்டங்களிலும் தீவிர பங்கேற்றது. இதன் காரணமாக பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் அல்லாமா இக்பால், முஹம்மத் அலி ஜின்னா, குவாஜா கமாலுத்தீன் போன்றவர்களுடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பையும் பெற்றார். பிரபல மார்க்க அறிஞர் பஸ்லுர் ரஹ்மான் அன்ஸாரி, இலங்கை பல்கலைக் கழகத்தின் முதல் அரபு, இஸ்லாமிய கற்கைத் துறையின் தலைவராக இருந்த கலாநிதி இமாம் போன்றவர்கள் அலிகாரில் அவரது சமகாலத்தவர்களாகவும் இருந்தனர். அத்துடன் ஈரானில் இஸ்லாமியப் புரட்சி வெற்றி பெறுவதற்கு முன்பே இமாம் கொமெய்னி போன்றவர்களை சந்தித்த முதல் இலங்கையராகவும் அவர் விளங்கினார். இவற்றின் மூலம் அவர் பெற்ற அனுபவ அறிவும் ஆளுமையும் அவரின் பிற்கால வாழ்வை நெறிப்படுத்தி வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றது.

புவியியல் முதுநிலைப் பட்டதாரியாக அலிகாரிலிருந்து வெளியேறிய பதியுத்தீன் அவர்கள், வேறெந்த உயர்பதவியையும் நாடாது தனது ஆசான் டீ.பி.ஜாயாவின் அன்புக் கட்டளைக்கிணங்க அன்று கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் கிளையக இயங்கி வந்த கம்பளை ஸாஹிராக் கல்லூரியின் உப அதிபராகப் பொறுப்பேற்றதன் மூலம் மகத்துவம் மிக்க ஆசிரியபணியில் காலடி பதித்தார். 200க்கும் குறைவான மாணவர்களையும் ஒரு ஓலைக் கட்டிடத்தையும் கொண்டிருந்த அன்றைய கம்பளை ஸாஹிராக் கல்லூரியை இலங்கையிலேயே மிகப் பெரிய கல்லூரியாக மாற்றியது மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பிரபலம் பெற்று அனைவராலும் பேசப்படும் பாடசாலையாகவும் மாற்றியமைத்தார். கம்பளை ஸாஹிராவின் வளர்ச்சி தானாக ஏற்பட்டதொன்றல்ல. அதற்கு பதியுத்தீன் அவர்களது வியர்வையும் உதிரமும் உரமாகப் பயன்படுத்தப்பட்டது. அதன் உயர்ச்சிக்காக 1956ல் தன்னை நாடி வந்த கல்வி அமைச்சர் பதவியையும் அவர் தியாகம் செய்தார்.

ஆரம்ப காலத்திலிருந்தே பண்டாரநாயக்க அவர்களுடனான கலாநிதி பதியுத்தீன் அவர்களின் நட்பு பிற்காலத்தில் அவரைத் தீவிர அரசியலுக்கு இட்டுச் சென்றது. அவரது அரசியல் பிரவேசம் இலங்கை முஸ்லிம்களின் சமூக மற்றும் கல்வி வளர்ச்சிக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. 1960, 1970 அரசாங்கங்களில் அவர் அமைச்சராக பணிபுரிந்த காலத்தில் பாடசாலைகளைத் தேசியமயமாக்கியதன் மூலம் கல்வியில் தனியாருக்கிருந்த ஏகபோக உரிமைகளையும் மாணவர்களிடையே காணப்பட்ட ஏற்றத்தாழ்வையும் உடைத்தெறிந்து இலவசக் கல்வியை அர்த்தமுள்ளதாக்கினார். அத்துடன்

நாடு முழுதும் ஒரே சீரான கல்வியைப் பெறும் வண்ணம் ஒரு தேசிய கல்வித்திட்டத்தை வகுத்து செயல்படுத்தினார். பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையை அதிகரித்தும் பல்கலைக் கழக பரிபாலன அமைப்பில் சீர்திருத்தங்கள் பல செய்தும் தூரப் பிரதேசங்களிலும் கிராமப் புறங்களிலும் உள்ள மாணவர்களும் பல்கலைக் கழகத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்பை ஏற்படுத்தினார். எல்லாவற்றுக்கும் மேலாக, வர்த்தகத்தை மட்டுமே நம்பி வாழ்ந்துகொண்டிருந்த முஸ்லிம் சமூகத்தின் தலைவிதியை மாற்றியமைத்து அவர்கள் கல்வியில் அக்கறை கொள்வதற்கான வாய்பையும் வசதிகளையும் ஏற்படுத்தினார். அவரால் தேசியமயமாக்கப்பட்ட முதல் பாடசாலையான கம்பளை ஸாஹிராக் கல்லூரி அதற்கு மன்மாதிரியாக அமைந்தது. சாதாரண தொழிலாளிகளின் பிள்ளைகள் தொடக்கம் உயர்குடி மக்களின் பிள்ளைகள் வரை எவ்வித பேதமுமின்றி கல்வியைத் தேடி வருபவர்களுக்காக அக்கல்லூரியின் கதவுகள் எப்போதும் திறந்துவிடப்பட்டிருந்தது.

1960ல் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் கல்வியமைச்சராகப் பொறுப்பேற்ற பின்புதான் முஸ்லிம் சமூகம் கல்வித்துறையிலும் ஏனைய துறைகளிலும் முன்னேற்றம் காண்பதற்கான உறுதியான அடித்தளம் இடப்பட்டது. முஸ்லிம்கள் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில் உறுதியான போராட்டங்களை அவர் முன்னெடுத்ததோடு அவற்றில் வெற்றியும் பெற்றார். அதன்மூலம் முஸ்லிம்களுக்கான ஆசிரிய நியமனங்கள் அதிகரித்தன. முஸ்லிம் பாடசாலைகளின் தரம் உயர்ந்ததோடு புதிய பாடசாலைகளும் உருவாகின. கல்வித்துறையிலும் ஏனைய துறைகளிலும் உயர் பதவிகளில் கல்வி கற்ற முஸ்லிம்கள் அமரும் வாய்புகள் ஏற்படுத்தப்பட்டன. இஸ்லாமிய இலக்கியம், இஸ்லாமிய நாகரிகம் போன்றவை கலைத்திட்டங்களில் சேர்க்கப்பட்டன. முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சியில் கூடிய அக்கறை காட்டப்பட்டதோடு அவர்களுக்கான ஒரு ஒழுக்கமான சீருடையும் அறிமுகம் செய்யப்பட்டது. இப்படி எழுதிக்கொண்டே செல்லுமளவுக்கு அவரது சேவை வியாபித்துச் சென்றது. இவ்வாறு தன்னலங்கருதாது கட்சி அரசியலுக்கு அப்பால் ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்த பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் 1977ல் முதல்முறையாக தேர்தல் ஒன்றில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவினார். அன்று முஸ்லிம் வாக்காளர் மனித நேயத்தைவிட அற்ப அரசியலைலே பெரிதாக மதித்தனர். இதனால் மனமுடைந்த நிலையில் பதி அவர்கள் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொண்டார். ஆனால் அதற்குப் பின்பும் முஸ்லிம்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் சமூக நலவுரிமைகளைப் பேணும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். எவ்வாறாயினும். ஒரு முஸ்லிம் அரசியல்வாதியால் அரசியல் பேதங்களுக்கு அப்பால் தான்சார்ந்த சமூகத்திற்காக எவ்வாறெல்லாம் உழைக்கலாம்? என்பதற்கு ஒரு உதாரண புருஷராக வாழ்ந்து மறைந்த அன்னாரின் சேவைகள் எந்த ஒரு முஸ்லிம் அரசியல்வாதியாலும் இன்றுவரை உடைக்க முடியாத சாதனை என்பது மட்டும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

# தாயா தாரமா?



தாரிக் அஜீஸ்

மரணப் படுக்கையில் கிடக்கிறார் அல்காமா. துடிக்கும் நெஞ்சுடன் சாகும் தறுவாயில் கிடக்கும் கணவனுக்கு கலிமா ("இறைவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு எவரும் இல்லை" முஹம்மத் (ஸல்) இறைவனின் தூதராவார்" என்கிற சத்தியப் பிரகடனம்) சொல்லத் தூண்டுகிறார், அல்காமாவின் மனைவி.

ஆனால் அல்காமாவின் நா எழ மறுக்கிறது. துடிக்கிறார். சாகும் தறுவாயில் சத்தியப் பிரகடனத்தைச் சொல்ல முடியாத வேதனையைக் கண்களில் காட்டுகிறார். தொழுகை, நோன்பு என்று பேணுதலுடன் வாழ்ந்த கணவனுக்கா இந்த நிலைமை? நெஞ்சம் பதைத்த அல்காமாவின் மனைவி. அண்ணல் நபியிடம் சென்று தகவல் கொடுக்கிறார்.

"இறைவனின் தூதரே! எனது கணவர் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். அவரது நிலை மோசமாக உள்ளது."

அண்ணல் நபி உடனே தமது மூன்று தோழர்களை - பிலால், சுஹைப், அம்மார் - அழைக்கிறார். "அல்காமாவிடம் செல்லுங்கள். அவருக்குக் கலிமா சொல்லிக் கொடுங்கள்."

அவர்கள் அல்காமாவிடம் செல்கிறார்கள். மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கும் அல்காமாவைச் சந்திக்கின்றார்கள். கலிமா சொல்லத் தூண்டுகிறார்கள். அல்காமாவால் அந்த சத்திய வார்த்தைகளைச் சொல்லவே முடியவில்லை. வாழ்வுமில்லாத மரணமுமில்லாத இரண்டுங் கெட்டான் நிலையில் வாடுகிறார். முகமெல்லாம் வியர்க்கிறது? கண்களில் கண்ணீர்.

அண்ணல் நபியின் தோழர்கள் திரும்புகிறார்கள். அல்காமாவின் பரிதாபமான நிலையைச் சொல்கிறார்கள். அண்ணல் நபி கேட்கிறார். "அல்காமாவின் பெற்றோரில் எவராவது உயிருடன் இருக்கின்றார்களா?"

"வயதான தாய் மட்டும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது". அந்தத் தாயைச் சந்திக்க விரும்புகிறார் அண்ணல் நபி. "அவரை வர முடிந்தால் வரச் சொல்லுங்கள். இல்லையேல் நானே அவர் வீட்டுக்கு வருகிறேன்."

அந்த மூதாட்டியின் முகத்தில் பிரமிப்பு! "அண்ணல் நபி என்னைத் தேடி வருவதா? நான்தான் அவரிடத்துக்குச் செல்ல வேண்டும்" என்று சொல்லிய வண்ணம் கைத்தடியை எடுத்துக்கொண்டு நபிகளாரைப் பார்க்கப் புறப்படுகிறார்.

மூதாட்டி முகமன் (ஸலாம்) கூற அண்ணல் நபி கேட்கிறார்.

"உண்மையைச் சொல்லுங்கள். அல்காமா எப்படிப்பட்டவர்?"

"ரொம்பவும் நல்ல பிள்ளை. தொழுகையாளி. நோன்பாளி. இறைவழியில் செலவழிப்பவன்."

"உங்களுடன் அவர் எப்படி நடந்து கொண்டார்?"

"இறைவனின் தூதரே. எனக்கு அவனைப் பிடிக்காது. அவன் மீது எனக்குக் கோபம்."

"அது ஏன்?"

"இறைத்தூதரே! அவன் ரொம்பத் தங்கமான பையன்தான். ஆனால் திருமணத்திற்குப் பிறகு என்னை மதிக்காமல் மனைவி பேச்சைக் கேட்க ஆரம்பித்து விட்டான். அதனால் எனக்கு அவன் மீது அளவு கடந்த கோபம்."

அண்ணலார் சொன்னார்கள். "அல்காமாவின் அன்னையின் கோபம்தான் அவரைக் கலிமா சொல்லவிடாமல் தடுக்கின்றது."

பிறகு அண்ணல் நபி (ஸல்) பிலால் (ரலி) அவர்களை அழைக்கிறார்கள். விறகுக் கட்டைகளைச் சேர்த்து எரிக்கச் சொல்கிறார்கள்.

அல்காமாவின் தாய் கேட்கின்றார். "இறைவனின் தூதரே! என்ன செய்கின்றீர்கள்?"

"நான் அல்காமாவை உங்கள் கண் முன்னாலேயே எரிக்கப் போகிறேன்."

"ஆ! இறைவனின் தூதரே! என்ன கொடுமை இது! என் கண் முன்னாலேயே என் மகன் எரிக்கப்படுவதை என்னால் தாங்க முடியாது" என்று அல்காமாவின் தாய் படபடவெனச் சொல்கிறார்.

அண்ணல் நபி (ஸல்) கூறுகிறார், "நீர் உம் மகனை மன்னிக்காவிட்டால், இறைவன் அவனை நரக நெருப்பில்தான் வீசுவான். இறைவனுடைய தண்டனை கடுமையானது" நிரந்தரமானது. வாழ்நாள் முழுவதும் அல்காமா செய்த இறைவழிபாடுகள், தொழுகைகள், நோன்பு எதுவுமே அவனுக்கு பயன் அளிக்காது. நீர் மன்னித்தால்தான் இறைவனும் அல்காமாவை மன்னிப்பான்" என்கிறார்.

அல்காமாவின் தாய் உடனே எழுந்து நின்று விடுகிறார்.

"ஓ! இறைத்தூரே! இறைவன் மீது சத்தியமாக, நான் அல்காமாவை மன்னித்துவிட்டேன்" என்கிறார்.

அல்காமா அக்கணமே சத்தியக் கலிமாவைச் சொல்கிறார். அன்றைய தினமே அவரது உயிர் பிரிந்து விடுகிறது. அவரது இறுதித் தொழுகையை அண்ணல் நபியே நடத்தி வைக்கிறார். அன்னையின் கோபத்துக்கு ஆளாகாதீர்கள் என முஸ்லிம்களை அறிவுறுத்துகிறார்.

"பெற்றோர் நலம் பேண வேண்டுமென்று நாம் மனிதனுக்கு அறிவுறுத்தியுள்ளோம். அவனுடைய தாய் நலிவுக்கு மேல் நலிவை ஏற்று அவனைத்தன் வயிற்றில் சுமந்தாள். அவன் பால்குடி மறக்க இரண்டு ஆண்டுகள் பிடித்தன... உன் பெற்றோருக்கு நன்றி செலுத்து."

திருக்குர்ஆன் (31:14)

# காணாமல் போன பொருள்...!

அறிவு பெறுவது என்றால் புதிதாக ஒன்றைப் பற்றி அறிந்து கொள்வது என்றே பலரும் நினைக்கின்றனர். இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் அறிவு பற்றிக் கூறியிருக்கும் ஒரு கருத்து இதற்கு மாறாக இருக்கிறது.

'அறிவு இறை நம்பிக்கையாளரின் காணாமல் போன பொருளாகும். எனவே அவர் அதை எங்கே கண்டாலும் அதை அடையும் உரிமை அவருக்கு உண்டு' என்பது அவர் வாக்கு (திர்மிதி, 1245) .


பெருமானாரின் இந்த வாக்கில் பல அரிய உண்மைகள் பொதிந்திருக்கின்றன. அவை:

அறிவு நம்மிடம் இருந்த பொருள் அது காணாமல் போய்விட்டது. எனவே அதைத்தேடி அடைய வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் உண்டு. அறிவு சிலருக்கு மட்டுமே உரிமையானதல்ல எல்லோருக்கும் உரிமையானது சிறப்பாக, இறைநம்பிக்கையாளருக்கு உரிமையானது. முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, அறிவு என்பது வெளியிலிருந்து மனித மூளைக்குள் திணிக்கப் படுவதில்லை. அது ஏற்கனவே மனிதனுக்குள் இருக்கிறது. கல்வியின் வேலை அதை வெளியே கொண்டு வருவதாகும்.

'கல்வி' என்ற சொல்லின் மூலச்சொல் 'கல்', இதன் பொருள் தோண்டுதல். அதாவது கல்வி மனிதனுக்குள் இருக்கும் அறிவைத் தோண்டி வெளியே கொண்டு வருகிறது என்று பொருள். மண்ணுக்குள் மறைந்திருக்கும் நீரைப்போல, அறிவு மனிதனுக்குள் மறைந்திருக்கிறது. மண்ணைத் தோண்டத் தோண்ட நீர் ஊற்றெடுத்துப் பெருகுவது போல், கற்கக் கற்க அறிவு ஊற்றெடுத்துப் பெருகும் என்கிறார் திருவள்ளுவர்.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு' – திருக்குறள் 396

'எஜுகேஷன்' (Education) என்ற ஆங்கிலச் சொல்லின் மூலப்பொருளும் 'தோண்டி வெளியே எடுத்தல்' (To dig out) என்பதுதான்.



கல்வி, அறிவைக் குறிக்கும் ' இல்ம்' என்ற அரபிச் சொல்லுக்கு 'கண்டு பிடித்தல்' என்ற பொருளுண்டு. இந்தச் சொல்லும் ஏற்கனவே நம்மிடம் மறைந்திருப்பதை அல்லது நம்மிடமிருந்து காணாமல் போனதைக் கண்டுபிடித்தல் என்ற பொருளையே தருகிறது. அறிவியலாரும் மறைந்திருக்கும் இயற்கையின் ரகசியங்களை அறியும்போது அதைக் 'கண்டுபிடித்தல்' (Discovery) என்றே கூறுவதையும் இங்கே கவனிக்க வேண்டும்.

'அறிவு ஏற்கனவே மனிதனுக்குள் இருக்கிறது என்றால், அது எப்படி காணாமல் போனது?' என்று கேட்கலாம்.

குர்ஆன் விவரிக்கும் ஆதாம்-ஏவாள் தொன்மத்தில் இதற்கான விளக்கம் இருக்கிறது.

இறைவன் 'பூமியில் நான் என் பிரதிநிதியைப் படைக்கப் போகிறேன்' என்று அவர்களிடம் (மலக்குகள்) கூறினான் அவர்கள், ' நாங்கள் உன் ஆணைகளைத் தட்டாமல் நிறைவேற்றுகிறவர்கள் எந்நேரமும் உன்னையே துதித்துக் கொண்டிருப்பவர்கள் . அப்படியிருக்க எங்களை விட்டுவிட்டு பூமியில் குழப்பம் விளைவித்து இரத்தம் சிந்தப் போகிறவர்களையா உன் பிரதிநிதி ஆக்கப் போகிறாய்?' என்று கேட்டார்கள்.

இறைவன்,' நீங்கள் அறியாததை நான் அறிவேன்' என்று கூறி முதல் மனிதராகிய ஆதத்தைப் படைத்தான். அவருக்கு எல்லாப் பொருட்களின் பெயர்களையும் கற்றுக் கொடுத்தான். இறைவன் அந்தப் பொருட்களை அமரர்களிடம் காட்டி, 'இவற்றின் பெயர்களை எனக்குத் தெரிவியுங்கள்' என்றான். அவற்றைப் பற்றி அறியாத அமரர்கள், 'இறைவா! நீ எங்களுக்குக் கற்றுக் கொடுத்ததைத் தவிர வேறு எதைப் பற்றியும் நாங்கள் அறியோம்' என்றனர். இறைவன், 'ஆதமே! அவற்றின் பெயர்களை அவர்களுக்குத் தெரிவிப்பீராக!' என்றான். ஆதம் அப்பெயர்களைக் கூறினார். (குர்ஆன் 2:30-33)

இதில் பெயர் என்று குறிப்பிடுவது வெறும் பெயர் மட்டுமல்ல. பெயரைக் குறிப்பிடும் 'இஸ்ம்' என்ற அரபிச் சொல்லுக்கு 'ஒரு பொருளின் உள்ளார்ந்த தன்மைகள்' என்று பெயர். ஒரு பொருளின் பண்பு, இயக்கம் பற்றி அறியாமல் அதற்குப் பெயர் சூட்ட முடியாது. எனவே இங்கே பெயர் என்பது ஒரு பொருளைப் பற்றிய முழுமையான அறிவு என்பது பொருள்படும்.

இதிலிருந்து இறைவன் எல்லாப் படைப்புகளையும் பற்றிய அறிவை ஆதத்துக்கு உணர்த்தினான் என்று தெரிந்து கொள்ளலாம். அதாவது படைக்கப்பட்ட பொருள்கள் ஒவ்வொன்றினுடைய தன்மை, இயக்கம் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் ஆற்றலை இறைவன் மனிதனுக்குள் வைத்துவிட்டான் என்று பொருள். இந்த அறிவாற்றல் மனிதனுக்குள் மறைந்து கிடக்கிறது என்பதையே 'அறிவு காணாமல் போன பொருள்' என்ற பெருமானாரின் வாக்கு உணர்த்துகிறது.

இந்த அறிவுதான் கல்வியாலும் ஆராய்ச்சியாலும் தோண்டத் தோண்ட வெளிப்படுகிறது. கூட்டத்தில் பலர் இருந்தாலும் நமக்குத் தெரிந்தவரையே நாம் அடையாளம் கண்டு கொள்கிறோம்.

படைப்புகளைப் பற்றி ஏற்கனவே உணர்த்தப்பட்டிருப்பதால்தான் மனிதன் அவற்றைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. குழந்தைகள் ஒவ்வொரு பொருளையும் கூர்மையாக உற்றுப் பார்ப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். அந்தப் பொருளை இதற்கு முன் எங்கோ பார்த்ததுபோல் தோன்றுவதால்தான் குழந்தைகள் அப்படி பார்க்கின்றன.

விதைக்குள் மரம் ஒளிந்திருப்பதைப் போல் மனிதனுக்குள் அறிவு ஒளிந்திருக்கிறது. அதாவது அறிவு 'காணாமல்' கிடக்கிறது. விதையிலிருந்து மரம் முழு வடிவில் 'சட்'டென்று தோன்றிவிடுவதில்லை. அது முளை, இலை, அரும்பு, பூ, காய், கனி என்று கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வெளிப்படுகிறது.

மனிதனுடைய அறிவும் அவ்வப்போதைய தேவைக்கேற்ப கொஞ்சம் கொஞ்சமாகவே வெளிப்படுகிறது. அறிவியலாரின் கண்டுபிடிப்புகள் இரண்டு வகைப்படும். ஒன்று, தேவைக்காகக் கண்டுபிடித்தது மற்றொன்று எதற்காகவோ ஆராய்ச்சி செய்யப்போய் தற்செயலாகக் கண்டுபிடித்தது. அறிவியலார் தற்செயலாகக் கண்டுபிடிப்பதும் மனிதனுக்குத் தேவை என்பதாலேயே இறைவன் அதை அப்படி வெளிப்படுத்துகிறான்.

'எல்லாப் பொருள்களின் கருவூலங்களும் எம்மிடம் உள்ளன. ஆனால் அவற்றைக் குறிப்பிட்ட ஓர் அளவிலேயே நாம் இறக்கினோம்' (15:21) என்று இறைவன் குர் ஆனில் குறிப்பிடுகிறான்.

இதிலிருந்து இறைவன் மனிதனுக்கு வேண்டியவற்றை, வேண்டிய நேரத்தில், வேண்டிய அளவில் கொடுத்தருள்கிறான் என்பதை அறியலாம். 'காணாமல் போன பொருளை' நாம் கண்டுபிடிக்கவும் இறைவனுடைய அருள் வேண்டும் என்பதையும் இந்த இறை உரை உணர்த்துகிறது. இறைவன் மனிதனுக்குப் பெயர்களைக் கற்றுக் கொடுத்தான் என்பது மொழிகளை உண்டாக்கிப் பேசவும், எழுதவும், உதவும் ஆற்றலையும் இறைவன் மனிதனுக்கு அளித்திருக்கிறான் என்றும் பொருள்படும்.

அவனே அவனுக்கு மொழியைக் கற்றுக் கொடுத்தான் (55:4 )

அவன் எழுதுகோலால் கற்பித்தான் (96:5) என்ற குர்-ஆன் வசனங்கள் இதையே தெரிவிக்கின்றன.

மொழியறிவு, எழுத்தறிவு என்பவையும் இறைவனால் உள்ளே மறைத்து வைக்கப்பட்டதால் இவையும் 'காணாமல் போன பொருள்களே'. இஸ்லாத்தில் பிற்காலத்தில் சிலர் கல்வியை மார்க்கக் கல்வி என்றும் உலகியல் கல்வி என்றும் பிரித்தனர். அதோடு நிற்காமல் உலகியல் கல்வி படிக்கத்தகாதது (ஹராம்) என்றும் தடுத்தனர். இறைவன் ஆதத்திற்கு படைப்புகளைப் பற்றிய அறிவை ஊட்டினான் எனக் கண்டோம். இதிலிருந்து முதல் மனிதருக்கு முதன் முதலாக போதிக்கப்பட்டது உலகியல் கல்வியே என்பதையும் , அதிலும் அந்தக் கல்வியை போதித்தவன் இறைவனே என்பதையும் அறியலாம். தன்னுடைய பிரதிநிதியாக இருந்து உலகத்தை ஆள மனிதனுக்கு உலகியல் கல்வி இன்றியமையாதது என்பதாலேயே இறைவன் இவ்வாறு செய்தான்.

'காணாமல் போன பொருள்' என்பதற்கு மூலத்தில் 'ழால்லத்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு 'பிராணி' என்று பொருள். இது அரபிச் சூழலில் ஒட்டகத்தைக் குறிக்கும். இதன் மூலம் பாலைவனவாசிக்கு ஒட்டகம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு மனிதனுக்கு அறிவு அவசியம் என்று புரிந்து கொள்ளலாம். பாலைவனவாசிக்கு ஒட்டகம் வெறும் வாகனம் மட்டுமல்ல. அவனுக்குத் தேவையான உணவு, உடை, உறையுள் மூன்றையும் அதுவே தருகிறது. அதுபோன்றே அறிவும், மனிதனுக்கு வாகனமாக இருக்கிறது. அவனுக்கு உணவு, உடை, உறையுள் மூன்றையும் தருகிறது.

ஒட்டகம் இல்லாமல் பாலைவனவாசி வாழ முடியாது. அத்தகைய ஒட்டகம் காணாமல் போனால் அவன் எப்படி அதைத் தீவிரமாகத் தேடுவானோ அப்படி மனிதன் அறிவைத் தேடவேண்டும் என்பது குறிப்பு.

'ழால்லத்' என்ற சொல்லுக்கு 'விடா முயற்சியுடன் தேட வேண்டிய பொருள்' என்ற பொருள் உண்டு. சில சமுதாயங்களில் உயர் வர்க்கத்தார் மட்டுமே கல்வி கற்கும் உரிமை பெற்றிருந்தனர். அடித்தட்டு மக்களுக்கும், பெண்களுக்கும் கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டது. பெருமானுருடைய வாக்கோ அறிவைப் பெறுகிற உரிமை எல்லோருக்கும் உண்டு என்று கூறுகிறது. இது அக்காலத்தில் ஒரு புரட்சிகரமான கருத்தாகும்.


'அறிவு, இறை நம்பிக்கையாளரின் காணாமல் போன பொருள்' என்று பெருமானார் கூறியதற்கும் பொருள் உண்டு. இறை நம்பிக்கையாளரே அறிவு மனிதனுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது என்ற பேருண்மையை வேதங்களைப் படிப்பதன் மூலம் அறிந்து கொள்வர். இறை நம்பிக்கை உறுதிப்பட அறிவு தேவை. எனவே அதற்காகவே இறை நம்பிக்கையாளர் அறிவைப் பெற வேண்டும்.

காணாமல் போன பொருள் கிடைக்குமா என்ற சந்தேகம் இறைநம்பிக்கையாளருக்கு ஏற்படாது. இறைவன் எப்படியும் அப்பொருளைக் கண்டையச் செய்வான் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கும். அதனால் அப்பொருளைக் கண்டடையும்வரை அவர்கள் சோர்வு அடையாமல் விடா முயற்சி செய்வர்.

எல்லாவற்றுக்கும் மேலாக அறிவு, இறை நம்பிக்கையாளரிடம் பயன்படுவது போல மற்றவர்களிடம் பயன்படாது. இறை நம்பிக்கையாளனே தான் பெற்ற அறிவை சக மனிதர், சக உயிர்களின் நன்மைக்குப் பயன்படுத்துவான்.

**கவிக்கோ அப்துல் ரகுமான்**

# கீரை வியாபாரியும் கிளியும் – கதை



இனிமை கொஞ்சப் பேசும் பச்சைக்கிளியொன்றை வளர்த்து வந்தான் ஒரு கீரை வியாபாரி. எஜமான் இல்லாத நேரத்தில் மேஜையில் அமர்ந்து அது கடையைக் கவனித்துக்கொள்ளும். கடைக்கு வருபவர்களிடம் கனிவாகப் பேசும். வாடிக்கையாளர்களிடம் வாய் இனிக்கப் பேசும். மனிதர்களிடம் அவர்களுக்கு ஏற்றவாறு பேசிய அந்தக்கிளி, பறவைகளின் பாடல்களிலும் பரிச்சயம் கொண்டிருந்தது.

ஒரு நாள் அது மேஜையிலிருந்து பறந்தது. பறந்த வேகத்தில் மேஜையிலிருந்த ரோஜா எண்ணெய் பாட்டில்களைக் கவிழ்த்துவிட்டது.

வீட்டிலிருந்து வந்த எஜமான் வழக்கம்போல மேஜையில் அமர்ந்தான். மேஜை பூரா பரவியிருந்த எண்ணெயால் அவனுடைய உடை முழுவதும் அசிங்கப்பட்டுப் போனது.

தலைதூக்கியது கோபம். கிளியில் தலையில் ஓங்கி அடித்தான். அடியின் உக்கிரத்தில் வழுக்கையாகிப் போனது வாஞ்சைக்கிளியின் வழுவழு தலை.

சில நாட்களில் கிளியை விட்டு எங்கோ பறந்து போனது அதன் பேச்சு. கிளியின் மௌனத்தைத் தாங்க முடியாத கீரை வியாபாரியோ வருத்தப் பெருமூச்சுக்கள் விட்டுக்கொண்டிருந்தான்.

தாடியைப் பிய்த்துக் கொள்வான். "ஐயகோ, என் செல்வங்களின் சூரியன் மேகங்களுக்கு அடியில் புதையுண்டு போனதே" என்று புலம்புவான்.

கிளிக்கு மறுபடியும் பேச்சு வரவேண்டும் என்பதற்காக, கண்ணில் பட்ட தர்வேஷ் (துறவி) களுக்கெல்லாம் அன்பளிப்புகள், காணிக்கைகள் வழங்கினான்.

மூன்று பகல்களும் மூன்று இரவுகளும் இவ்விதம் கழிந்தபின், கனக்கும் மனதுடன் ஒரு நாள் மேஜையின்மீது அமர்ந்தான் கீரை வியாபாரி. மறுபடியும் பேசிவிடும் என்ற நம்பிக்கையில் கிளிக்கு ஏதேதோ தின்பதற்குக் கொடுத்துப் பார்த்தான்.

அப்போது அந்தப்பக்கமாக ஒரு சூ.ஃ.பி வந்தார். அவருடைய தலை பிச்சைப் பாத்திரத்தின் வெளிப்பக்கத்தைப்போல வழுக்கையாக இருந்தது.

அவரைப் பார்த்தவுடன் துள்ளிக் குதித்து கிளி பேசத்தொடங்கியது.

"அட, தர்வேஷே! எப்படி உம் தலை இப்படி வழுக்கையானது?! என்னைப் போல நீரும் பாட்டிலில் இருந்த எண்ணெயைக் கொட்டிவிட்டீரா?"

கிளியின் அனுமானத்தை எண்ணி, நின்று கொண்டிருந்தவர்கள் நகைத்தார்கள்.

(இதுதான் கதை. இதைவைத்து மௌலானா அவர்கள் தருகின்ற விளக்கம் அற்புதமானது. குறிப்பாக, தாங்கள் சொல்வதுதான் சரி என்று பிடிவாதமாக மேம்புல் மேய்கிற முஸ்லிம் "அறிஞர்க"ளுக்கு பாடம் புகட்டக் கூடியது. கேளுங்கள்.)

மனிதப் புனிதர்களான இறைநேசர்களின் செயல்பாடுகளை உங்களுடையதை வைத்து எடை போட்டுவிடாதீர்கள். ஷேர் (சிங்கம்) என்பதும் ஷீர் (பால்) என்பதும் எழுதும்போது ஒன்றுபோலத்தான் தெரியும் !

இந்த விஷயத்தில் இந்த உலகம் முழுவதும் தவறாகத்தான் சென்று கொண்டிருக்கிறது. ஆண்டவனுடைய அடியார்களை சரியாகப் புரிந்துகொள்பவர்கள் அரிது. இறைநேசர்களும், இறைத்தூதர்களும் தங்களைப் போன்றவர்கள்தான் என்று (புரியாத) மக்கள் கூறுகிறார்கள்.

"பாருங்கள், நாங்களும் மனிதர்கள், அவர்களும் மனிதர்கள்! தூக்கத்திற்கும் உணவுக்கும் எங்களைப் போலவே அவர்களும் அடிமைகள்தான்" என்கிறார்கள்.

அவர்களுக்கும் இறைநேசர்களுக்கும் இடையில் பாரதூரமான வித்தியாசமிருப்பதை தங்களுடைய குருட்டுத்தனத்தினால் அவர்களால் பார்க்க முடியவில்லை.

இரண்டு வகையான "ஜன்பூர்" பூச்சிகளும் ஒரே இடத்திலிருந்து சாப்பிட்டாலும், குடித்தாலும் — ஒன்றிலிருந்து வருவது கொட்டும் குளவி. மற்றொன்றிலிருந்தோ தேன்சொட்டும் தேனீ! இரண்டு வகையான மான் இனங்களும் புல்லைத் தின்று நீரைக்குடித்து வாழ்ந்தாலும், ஒன்றிலிருந்து கிடைப்பது சாணம். மற்றொன்றிலிருந்தோ தூய கஸ்தூரி !

(இரண்டும்) பார்வைக்கு ஒன்றாக இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில் உப்பு நீரும் குடிநீரும் பார்ப்பதற்கு தெளிவாகத்தான் தெரியும். (ஆன்மீகச்) சுவை அறிந்தவர்களைத் தவிர வேறு எவரால் இதைப் பிரித்து அறியமுடியும்?

இறைத்தூதர்கள் செய்த அற்புதங்கள், மந்திரவாதிகள் செய்து காட்டிய தந்திரங்கள் இரண்டுமே ஏமாற்று வேலை என அறியாதவர்கள் எண்ணினார்கள்.

இறைத்தூதர் மூஸாவிடம் இருந்ததைப் போலவே, அக்கால மந்திரவாதிகளும் கையில் ஒரு கோல் வைத்திருந்தார்கள். ஆனால் மூஸாவின் கோல் ஆண்டவனின் அருளைக் கொண்டு உயர்த்தப்பட்டது. மந்திரவாதிகளின் கோல்களோ சர்வவல்லமை படைத்தவனின் சாபத்தைக் கொண்டு தூக்கப்பட்டது.

இறைநேசர்களும் இறைத்தூதர்களும் தங்களைப் போன்றவர்கள்தான் என்று நினைக்கிற நம்பிக்கையற்றவர்கள் மனிதக் குரங்கைப் போன்றவர்கள். மனிதன் செய்வது மாதிரியெல்லாம் "காப்பி"யடித்து செய்துவிட்டு, நானும் மனிதனும் ஒன்றுதான் என்று நினைத்துக்கொள்கிறது அது.

தொழுகை, நோன்பு, ஹஜ், ஜகாத் (போன்ற) கடமைகளை நிறைவேற்றும்போது, உண்மையான நம்பிக்கையாளர்களும் நயவஞ்சகர்களான முனா.ஃ.பிக்குகளும் ஒன்றுபோலத்தான் தோன்றுவார்கள். ஆனால் ஒருவருக்கு அதனால் வெற்றியும் மற்றவருக்கு அதனால் தோல்வியும் உண்டாகிறது!

உரைகல் இல்லாமல் சுத்தமான தங்கத்தை எப்படிப் பிரித்தறிவாய்? அந்த உரைகல் உனது அறிவல்ல. யாருடைய இதயத்தில் அல்லாஹ் அந்த உரைகல்லை வைக்கிறானோ, அவர்களுக்குத்தான் நிச்சயமற்றதையும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதையும் பிரித்தறியக்கூடிய தகுதி வரும்.

உலக அறிவென்பது உலகில் முன்னேற ஏணி. மார்க்க ஞானமென்பது சொர்க்கத்தின் ஏணி!

உடல் ஆரோக்கியத்தை மருத்துவனிடம் தேடு. உள்ள ஆரோக்கியத்திற்கு அல்லாஹ்.

ஆன்மீக வழி, உடல் ஆரோக்கியத்தை முதலில் அழிக்கும். பின்பு முன்னதைவிட ஆரோக்கியமானதாக அமைக்கும். கீழே உள்ள தங்கப் புதையலுக்காக வீட்டை இடித்துவிட்டு, பின்பு அந்தப் புதையலைக் கொண்டே வீட்டை மறுபடியும் முன்னைவிட அழகாக, உறுதியாகக் கட்டுவது மாதிரி.

ஆற்று நீரைக் காலி செய்துவிட்டு, மறுபடி அதில் குடிநீரை மட்டும் ஓடவிடுவது மாதிரி.

தோலைக்கிழித்து, உள்ளே தைத்த துருப்பிடித்த அம்பின் முனையை வெளியே எடுத்த பிறகு, மறுபடியும் புதியதோல் காயத்தின் மீது வளர்வது மாதிரி.

இறைவனில் மூழ்கிய இறைநேசர்களுக்குச் சேவை செய்வதன் மூலம் உன்னுடைய உண்மையான முகத்தைக் கண்டுகொள்.

தம்முடைய முகத்தோடு எத்தனையோ பேய்கள் உலாவுகின்றன. ஜாக்கிரதை!

இறைநேசர்களுடைய மொழியில் பேசி, பாமரர்களை அயோக்கியர்கள் ஏமாற்றுவார்கள் ஜாக்கிரதை!

---

# வாழைப்பழம் சாப்பிடலாம்



உலகில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் பழங்களில் நான்காவது இடத்தில் இருக்கிறது வாழைப் பழம். இந்த வாழைப் பழம் சரி நுட்பமான முழு நிறைவான உணவாகும். புரதத்துடன் மாவுச் சத்து விற்றமின்கள் தாது உப்புக்கள் முதலியன போதுமான அளவு இப்பழத்தில் உள்ளன. நன்கு பழுத்த ஒரு வாழைப் பழத்தைச் சாப்பிட்டவுடன் இரத்தத்தில் க்ளுக்கோஸ் அளவு அடுத்த 15 நிமிடங்களுக்குள் அதிகரிப்பதால் உடலும் மனமும் சுறுசுறுப்பாகி விடுகின்றன. மற்ற உணவு என்றால் இன்னும் அதிக நேரம் ஆகும். இந்தச் சக்தி அடுத்த 40 நிமிடங்கள் வரை உடலில் இருக்கும் காய்ச்சல் வருவது போல் உணர்ந்தால் ஒரு வாழைப் பழகத்தை உடனே சாப்பிடுங்கள். இன்று விஞ்ஞானிகளும் சத்துணவு நிபுணர்களும் உலகின் மிக உயர்ந்த தரமான உணவு வாழைப்பழம்தான் என்கிறார்கள்.

புரதம் நரம்புகள் தளராமல் இளமை நீடிக்க கல்சியம் இரத்த சோகையைத் தடுக்கும் இரும்புச் சத்து இதயம் சீராய்ச் சுருங்கி விரிவடைய மக்னீஷியம் பக்டீரியாக்களை அழிக்கும் ஐதரோ அமிலம் சோடியம் உப்பு இரத்தத்தைத் திரவ நிலையில் இருக்க உதவும் பொட்டாசியம், மூளை வளர்ச்சிக்கும், பார்வைத் திறனுக்கும் பொசுபரல் என மூன்று விற்றமின்களும் வாழைப் பழத்தில் உள்ளன.

வாழைப் பழத்தில் உள்ள விற்றமின் சி பல் ஈறுகளையும் எலும்புகளைப் பிணைக்கும் தசை நார்களையும் உறுதியுடன் இருக்க உதவுகிறது. இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் உருவாக விற்றமின் ஏயையும் உடல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு விற்றமின் சி உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்கிக் கொடுக்கிறது.

மங்னீசியம், பொட்டாசியம், சோடியம், பொசுபரஸ் போன்ற உப்புக்கள் வாழைப்பழத்தில் தாராளமாக இருப்பதால் இரத்த ஓட்டம் தங்கு தடையின்றிச் சீராக இருக்கவும் முக்கியமாக இரத்தக் கொதிப்பு ஏற்படாமலும் பாதுகாத்து வருகிறது. நாம் தினமும் காப்பிடும் இரண்டு வாழைப் பழங்கள் இரத்தக் கொதிப்பை எளிதில் கட்டுப்படுத்தும்.

நாம் சாப்பிடும் உணவில் பொட்டாசியமும் சோடியமும் இருந்தால் தான் நம் உடலில் உள்ள நெகிழ்ச்சிப் பொருள்கள் சம நிலையில் இருக்கும் பொட்டாசியம் உப்பு குறைந்தால் இரத்த ஓட்டத்தில் தடை ஏற்படும். நாம் சாப்பிடும் அனைத்துப் பொருள்களிலும் சோடியம் உப்பு இருக்கிறது. ஆனால் பொட்டாசியம் இல்லை. இந்தக் குறையை தினமும் ஒரே ஒரு வாழைப்பழம் சாப்பிட்டு வருவதன் மூலம் நீக்கி விட முடியும்.

விளையாட்டு வீரர்களின் கடைசி நேர மன நிலையை வெற்றியா தோல்வியா என நிர்ணயிப்பது அதன்படி முழு வேகத்துடன் செயற்படுவது என அனைத்தையும் நிர்ணயிப்பது அவர்களின் உடலில் உள்ள பொட்டாசியம்தான். பொட்டாசியம் அறவே குறையாமல் இருந்தால் நான்காவதாக ஓடி வரும் வீரர் அந்தக் கடைசி நொடியில் முடிவு எடுத்து முதல் ஆளாக ஓடி வந்து வெற்றி பெற்று விடுவாராம். விளையாட்டு வீரர்களுக்கும் தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்ற உறுதியான வர்களுக்கும் முழுமையான சக்தி நிரப்பப்பட்டுள்ள பழம் வாழைப் பழம்தான் என்கிறார் பிரித்தானிய சத்துணவு நிபுணர் ஜேன்கிரி.ஃ.ப்பின்.

கொழும்புச் சத்து அதிகம் உள்ளவர்களும் சிறுநீரகக் கோளாறு உள்ளவர்களும் நீரிழிவு நோய் உள்ளவர்களும் வாழைப் பழத்தைத் தவிர்த்துவிட வேண்டும்.

# ஹைதர் அலி – மன்னர் குலம் சாராத மாவீரன்!

முகலாயர் வீழ்ச்சிக்குப் பின் 'இந்துஸ்தானத்'தின் கவுரவம் குறித்துக் கவலைப்பட உயர்குடிப் பெருமிதங்களால் குருடாக்கப்படாமல் புதுமையைக் கற்றுத் தேர்வதில் வெறி கொண்ட ஒரு வீரன் தோன்ற வேண்டியிருந்தது.

"ஆங்கிலேயர்களை நாம் பல முறை தோற்கடித்து விட்டோம். ஆனால், ஒரு இடத்தில் தோற்கடிப்பதன் மூலம் அவர்களை நாம் வீழ்த்த முடியாது...... காந்தகார் மற்றும் பாரசீகத்தின் மன்னர்களை வங்காளத்தின் மீதும், மராத்தாக்களை பம்பாயின் மீதும் படையெடுக்கச் செய்யவேண்டும். பிரெஞ்சுக்காரர்களையும் இணைத்துக் கொண்டு நாம் அனைவரும் மேற்கொள்ளும் கூட்டான நடவடிக்கை மூலம் ஆங்கிலேயர்கள் மீது ஒரே நேரத்தில் எல்லா முனைகளிலும் போர் தொடுக்க வேண்டும்...."

- ஹைதர் அலி தன் தளபதிகளிடம் ஆற்றிய உரை, ஜனவரி, 1782.

முகலாய சாம்ராச்சியம் நொறுங்கி, அதன் கவர்னர்களாக ஆங்காங்கே நியமிக்கப்பட்ட நிஜாம், ஆற்காட்டு நவாப் போன்றவர்கள் தம்மை மன்னர்களாகப் பிரகடனம் செய்து கொள்ள, அவர்களால் நியமிக்கப்பட்ட பாளையக்காரர்களும் சிற்றரசர்களும் அவர்களது அதிகாரத்திற்குக் கட்டுப்பட மறுக்க, முடிவில்லாத போர்களால் விவசாயமும் உள்நாட்டுத் தொழில்களும் சின்னாபின்னமாக்கப்பட்டுவந்த காலம்தான் ஹைதர் காலம்.

18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியான இந்தக் காலகட்டத்தில் இந்துஸ்தானத்தின் பல்வேறு இடங்களில் தம் வணிக மையங்களை உருவாக்கியிருந்தனர் ஐரோப்பியக் கிழக்கிந்தியக் கம்பெனியினர். இந்துஸ்தானத்தின் பிரபுக்குலம் தமக்குள் கட்டி உருண்டு கொண்டிருந்ததால், ஐரோப்பாவிலிருந்து கொண்டுவந்த ஆடம்பரப் பொருட்களை இங்கே சந்தைப்படுத்தவும் முடியாமல், மலிவான தரமான இந்தியத் துணிகளின் ஆக்கிரமிப்பால் தடுமாறிக் கொண்டிருக்கும் இங்கிலாந்தின் தொழில்வளர்ச்சியைக் காப்பாற்றவும் முடியாமல் ஆங்கிலேய ஆளும் வர்க்கங்கள் தவித்து வந்த காலமும் அதுதான்.

'இந்துஸ்தானத்'தின் பொருட் சந்தையைக் காட்டிலும் போர்ச்சந்தை பெரிதாக இருப்பதால், வணிகம் செய்து பொருளீட்டுவதைக் காட்டிலும், அந்த வணிகத்தைப் பாதுகாப்பதற்காகத் தாம் கொண்டுவந்த படையை வாடகைக்கு விட்டுப் பொருளீட்ட முடியும் என்பதை கும்பினிக்காரர்கள் புரிந்து கொண்டார்கள். போரிடும் சமஸ்தானங்களின் சார்பில் கூலிப்படையாய்ச் சென்றார்கள். வரி கட்டாத பாளையக்காரர்களை மிரட்டி வரி வசூலிக்கும் அடியாள் படை வேலையும் செய்தார்கள். பாளையக்காரர்களிடம் வரி தண்டும் உரிமையையும் வணிகம் செய்யும் உரிமையையும் பெற்றார்கள்.

கட்டுப்படாத பாளையங்கள் மீது படை நடத்திப் போர் புரிந்து வரி வசூலிக்கும் 'சிரமம்' கூட இல்லாமல், உட்கார்ந்த இடத்திலிருந்து கூலிப் படையை வைத்தே இராச்சியம் ஆள முடியுமென்ற இந்த அரிய வாய்ப்பை நழுவவிட விரும்பாத நவாப்பு, பூலித்தேவனுக்கு 'எதிராகக் கும்பினிப் படையை ஏவிவிட்ட காலமும் அதுதான்.

ஆளப்பிறந்த இந்து மேல் வருணத்தினராயினும், அதிகாரம் பறிபோவதைத் தம் கண் முன்னே கண்டு கொண்டிருந்த முகலாய உயர்குடியினராயினும் மார்க்சின் வார்த்தைகளில் சொல்வதென்றால் "பழமைக்குரிய கவுரவ மனப்பான்மை கூட இல்லாதவர்கள்". அவர்கள் தம் அதிகாரத்தின் சாசுவதத் தன்மை குறித்த கனவைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு கண்ணை இறுக மூடிக் கொண்டார்கள்.



எனவே 'இந்துஸ்தானத்'தின் கவுரவம் குறித்துக் கவலைப்படுவதென்பது, சுய கவுரவம்கூட இல்லாத இவர்களுடைய யோக்கியதைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. அதற்கு, தன் முயற்சியால் சாம்ராச்சியத்தை உருவாக்க முடிந்த ஒரு வீரன், நிலப்பிரபுத்துவ உயர்குடிப் பெருமிதங்களால் குருடாக்கப்படாமல் புதுமையைக் கற்றுத் தேர்வதில் வெறி கொண்ட ஒரு வீரன் தோன்ற வேண்டியிருந்தது.

தென்னிந்தியாவில் தொடங்கிய முதல் விடுதலைப் போரின் ஊற்றுக்கண்களான ஹைதரும் அவர் மகன் திப்புவும் மன்னர்குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஹைதரின் கொள்ளுப்பாட்டன் ஒரு தர்காவின் பணியாள். தாழ்தப்பட்ட முசுலிம்களின் சூ..பி வழிபாட்டு முறையையே ஹைதரின் குடும்பம் பின்பற்றியது என்பதிலிருந்து அவரது சமூகப் பின்னணியை நாம் புரிந்து கொள்ள இயலும். ஆற்காடு திப்பு மஸ்தான் தர்ஹாவில் நேர்ந்து கொண்டு அவர் நினைவாகத் தன் மகனுக்குத் திப்பு என்று பெயர் சூட்டினார் ஹைதர்.

குதிரைப்படை வீரனாக மைசூர் உடையார் மன்னரால் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஹைதர் தன்னுடைய போர்த்திறத்தால் உயர்ந்தவர். பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையில் தமிழகத்தில் நடைபெற்ற இரண்டாவது மூன்றாவது கர்நாடகப் போர்களில், உடையாரின் குதிரைப்படைத் தளபதியாக பிரெஞ்சுக்காரர்களுடன் இணைந்து போரிட்ட ஹைதர், திண்டுக்கல்லின் பவுஜ்தாராக (கவர்னர்) உடையாரால் நியமிக்கப்பட்டார்.

மன்னன் இறந்த பின் அரண்மனைச் சொகுசை அனுபவிப்பதைத் தவிர வேறொன்றும் அறியாத மன்னனின் வாரிசுகளை 'கவுரவமான அரியணையில்' ஓரமாக அமர்த்திவிட்டு மைசூர் அரசை விரிவுபடுத்தத் தொடங்கினார் ஹைதர்.

1761இல் அதிகாரபூர்வமாகப் பதவிக்கு வந்த ஹைதர் ஒரு அறிவுக்கூர்மை கொண்ட போர்வீரன். முறைப்படுத்தப்பட்ட தொழில் முறை இராணுவம், போர்த்தந்திரம், நவீன தொழில் நுட்பம் ஆகிய மூன்றிலும் மேம்பட்டிருந்த ஐரோப்பியப் படைகளிடம் உதிரிக் கும்பல்களாக இருந்த உள்நாட்டு இராணுவங்கள் தோல்வியடைவதை இரண்டு கர்நாடகப் போர்களிலிருந்தும் அவர் புரிந்து கொண்டிருந்தார்.

படைகளுக்கும் வரிவசூலுக்கும் பாளையக்காரர்களின் தயவைச் சார்ந்திருக்கத் தேவையில்லாத ஒரு மையப்படுத்தப்பட்ட இராணுவத்தையும் அரசையும் உருவாக்குவதை நோக்கித் திரும்பியது ஹைதரின் கவனம். மைசூர் அரசின் கீழிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பாளையக்காரர்களை நீக்கிவிட்டு விவசாயிகளிடமிருந்து நேரடியாக வரி வசூல் செய்யும் மையப்படுத்தப்பட்ட அரசு எந்திரத்தை உருவாக்கினார் ஹைதர்.

சிப்பாய்களுக்கு 40 நாட்களுக்கு ஒரு முறை ஊதியம் என்னும் முறையை இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தியவர் ஹைதர் என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள். ஹைதருடைய படைவீரர்களின் எண்ணிக்கையோ 1,80,000. துப்பாக்கிகள் பீரங்கிகள் ஆகியவற்றை உருவாக்கவும் இயக்கவும் 210 ஐரோப்பியர்களையும் பணிக்கு அமர்த்தியிருந்தார் ஹைதர்.

1767 – 69இல் ஹைதர் தொடுத்த முதல் காலனியாதிக்க எதிர்ப்புப் போரில் ஆங்கிலேயர்கள் தோற்கடிக்கப்பட்டனர். ஹைதரின் உத்தரவுப்படி செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கதவுகள் மீது ஆணியறைந்து பதிக்கப்பட்டது ஒரு ஓவியம். அதனைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறான் லாலி என்ற கும்பினி அதிகாரி:

"நொறுக்கப்பட்ட பீரங்கிகளின் குவியல் மீது அமர்ந்து கொண்டு, தன் காலடியில் மண்டியிட்டிருக்கும் கும்பினி அதிகாரி டூப்ரேயின் மூக்கைப் பிடித்து உலுக்குகிறான் ஹைதர். வாயிலிருந்து தங்க நாணயங்களைக் கக்குகிறார் டூப்ரே. ஆங்கில இராணுவ அதிகாரியின் பதக்கம் அணிந்த ஒரு நாய் ஹைதரின் பின்புறத்தை நக்கிக் கொண்டிருக்கிறது." ஹைதரின் காலனியாதிக்க வெறுப்புக்கு இதைவிட என்ன சான்று வேண்டும்?

முதல் போரில் தோல்வி கண்டபின் நிஜாமுக்கு எதிராகக் கூட்டணி அமைக்க ஆங்கிலேயர்கள் ஹைதரை அழைத்தபோது அவர் அதற்கு இணங்கவில்லை. அதேபோல, பிளாசிப் போரில் ஆங்கிலேயர் வென்றுவிட்ட செய்தியறிந்த கணம் முதல் மராத்தியர்களையும் ஹைதர் எதிரியாகக் கருதவில்லை.


1780இல் தொடங்கி 1784இல் முடிந்த இரண்டாவது காலனியாதிக்க எதிர்ப்புப் போர்தான் ஹைதரின் கனவுப்போர். தன்னந்தனியே ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் நடத்திக் கொண்டே, மராத்தாக்களையும் நிஜாமையும் இணைத்து ஒரு ஐக்கிய முன்னணி அமைத்து ஆங்கிலேயரைத் துடைத்தொழிக்க முயன்றார் ஹைதர். ஆனால், முதுகெலும்பில் தோன்றிய புற்றுநோய் அவரை 60வது வயதில் காவு கொண்டுவிட்டது.

மரணத்திற்குச் சில மணி நேரங்கள் முன், 1782 டிசம்பர் சித்தூர்ப் போர்க்களத்தில் இருந்தபடியே, மலபாரில் வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்த தன் மகன் திப்புவுக்கு ஹைதர் எழுதிய கடைசி கடிதம் நெஞ்சை உருக்கும் ஓர் ஆவணம்.

அந்தக் கடிதத்தில் மைசூர் அரசின் பாதுகாப்பைப் பற்றி ஹைதர் கவலைப்படவில்லை. ஆசியாவில் கவுரவமான இடத்தைப் பெற்றிருந்த 'இந்துஸ்தானம்' சிதறிச் சின்னாபின்னமாகி விட்டதே என்று கலங்குகிறார். 'இந்துஸ்தானத்'தின் மக்களுக்கு நாட்டின் மீதான நேசம் போய்விட்டதே என்று வருந்துகிறார். கவுரவத்தை இழந்து அந்நியனுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நிலப்பிரபுத்துவ மன்னர்களின் துரோகமும், சூழ்ச்சியாலும் நயவஞ்சகத்தாலும் அவர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றும் ஆங்கிலேயர்கள் மீதான வெறுப்பும் காலனியாதிக்க எதிர்ப்புணர்வாக ஹைதரிடம் கருக்கொள்வதை நாம் காண்கிறோம்.

ஆங்கிலேயக் காலனியாதிக்கத்தின் நெஞ்சைப் பிளக்கும் ஈட்டி முனையாக மைசூர் விளங்கவேண்டும் என்பதுதான் திப்புவுக்கு ஹைதர் விட்டுச் சென்ற உயில்.

இஸ்லாமியர்கள்........4ம் பக்கத் தொடர்ச்சி...



இந்து. ஏன் இந்த நாயகர்கள் முஸ்லிம் வேஷமே ஏற்கக்கூடாதா..? பெரும்பான்மை மதத்தைத்தான் சார்ந்தவனாய் இருக்க வேண்டும் நாயகன் என்று எழுதப்படாத விதியே இருக்கிற கோடம்பாக்கத்தில் அதை மீற கமலால் கூட முடியாது. சேரனின் பொக்கிஷம் வித்தியாசமாய்த் தொடங்கியதே எனப் பார்த்தால்... அய்யய்யோ பத்மப்ரியாவின் அப்பா(முஸ்லிம்கள்)தான் படத்தின் வில்லன். வாக்கு கொடுத்து அதை மீறுகிறவர். ஏன் இந்த வெறிப்பார்வை..? சேரன் அதே படத்தை கதையை மாற்றி யோசிப்பாரா..? அல்லது எடுப்பாரா..? பத்மப்ரியா ஒரு ஹிந்து சேரன் ஒரு முஸ்லிம் என எடுத்தால்... எடுத்தால் என்று தான் சொல்ல முடியும்.. எடுக்க மாட்டார்கள்.

சரி போகட்டும் என்றால் நம்பள்கி நிம்பள்கி என்று கசாப்பு கடைக்காரர்களாகவும் கறி வெட்டுகிறவர்களாகவும் தானே அதற்கு முன்பு வரை சித்தரிக்கப்பட்டார்கள்..? சில விதிவிலக்குகள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. ஆனால் அவை மனக்காயங்கள் மொத்தத்தையும் மறுதலிப்பதற்கோ மறுப்பதற்கோ மறப்பதற்கோ போதாது என்பதே உண்மை.

இஸ்லாமியர்கள் பற்றி எடுத்துச் சொல்வதற்கு எத்தனை விஷயங்கள் இருக்கின்றன..? ஒரு முழுமையான சினிமா, முழுக்க இஸ்லாமிய குடும்பமொன்றின், இஸ்லாமிய கிராமமொன்றின், இஸ்லாமிய வாழ்க்கைமுறை ஒன்றைப் பதிவு செய்திருக்கிறதா இது வரை தமிழ் சினிமாவில்..? அப்படி ஒரு படம் எடுத்தால் ஓடாதா..? அல்லது இஸ்லாமியர்கள் வரலாற்றில் கதைகளே இல்லையா? இந்த மண்ணில் காலம் காலமாய் இஸ்லாமியர்கள் என்றாலே கறிவெட்டுபவன், தமிழை தப்பாக பேசுபவன் அல்லது குண்டு வைப்பவன் தானா..?

கட்டிடக்கலையில் இருந்து சா∴ப்ட்வேர் துறை வரை தையல் கலையில் இருந்து மருத்துவர் வரை விஞ்ஞானிகளில் இருந்து மாலுமிகள் வரை இஸ்லாமியர்கள் சாதிக்கவில்லையா..? அல்லது சாதிப்பதை வெளிச்சொல்ல தமிழ்சினிமா தயாராக இல்லையா..? இது தான் இப்பொழுது நம் முன் நிற்கும் கேள்வி.

எந்த ஒரு படத்திலும், ஆகா.. ஒரு கண்டிப்பான போலீஸ் அதிகாரி இஸ்லாமியர் என கதை சொல்கிறார்களே, பரவாயில்லையே என நினைத்தால் (உதாரணம்:போக்கிரி) உடனே வந்து இறங்குவார் அலிபாய். சர்வதேச குண்டுவைக்கும் டெக்னாலஜிஸ்ட். என்ன கொடுமை இது..?

இவர்கள் எல்லோருமே கதை எழுத மன்னிக்கவும் கதை பண்ண உட்காரும் பொழுதே ஒரு எதிர்மறைப்பாத்திரம் முஸ்லிமாக வந்தாக வேண்டும் என்ற முன் முடிவில் அதை பேலன்ஸ் செய்வதற்காகவே இன்னொரு கதாபாத்திரம் முஸ்லிம்.. அது எதற்கு..? மத ஒற்றுமை பேச, தியாகம் செய்ய.. ஏன் தனியாக ஒரு நல்ல முஸ்லிம் கதாபாத்திரத்தை சிந்திக்கவே முடியாத ஊனமுற்றவர்களாகவே இயங்குகிறீர்கள் இயக்குநர்களே...?

சரி. பொருளாதாரத்தில் கல்வியில் இன்னும் வாழ்நிலைகளில் முன்னேறி இருக்கிற, இந்தியத்திருநாட்டில் எல்லா ஊர்களிலும் பாரபட்சமின்றி பாகுபாடின்றி இடங்களையும் சொத்துக்களையும் வாங்கி இருக்கிற, வாங்குகிற, வாங்கப் போகிற மேல்நிலை முஸ்லிம்களை தீவிரவாதிகளாகவே சித்தரிக்கிறீர்களே.. அதே நேரம் இன்னமும் கடைநிலையில் அடுத்த வேளை உணவுக்கு கஷ்டப்படுகிற, வாழ்வாதாரத் தேவைக்கு கூட கை ஏந்தும் நிலையில் கல்வி அறிவும் பெறாமல், கூலிகளாகவும் ஏழைகளாகவும் இந்த நாட்டில் பரிதவிக்கிற ஏழை முஸ்லிம்களின் கதையை படமாக்க அல்லது எண்ணிப் பார்க்க கூட நேரமில்லையா தோழர்களே.. அல்லது அப்படி ஏழைகளாக எந்த ஒரு முஸ்லிமும் இல்லை என உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறதா....?

நமது வீதிகளில் நமது வீடுகளுக்கு இடப்புறமும் வலப்புறமும் வசித்துக் கொண்டு, நம் பிள்ளைகள் படிக்கிற பள்ளிகளில் தம் பிள்ளைகளைப் படைக்க வைத்து, நாம் பணம் சேமிக்கும் வங்கிகளில் தம் பணத்தையும் சேமித்துக் கொண்டு, நம்மிடம் தம் பொருளை விற்று, நம் பொருளை தமக்கென வாங்கி, குருதி கொடுத்து குருதி பெற்று எல்லா விதங்களிலும் சிறுபான்மையினராய் எல்லா நேரங்களிலும் அடுத்து என்ன நிகழுமோ என்ற பதற்றத்துடனே வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு இஸ்லாமியர் இந்த “மதச்சார்பற்ற” காந்தி தேசத்தில் செய்யும் பிழைதான் என்ன..? இந்த நிலத்திலேயே தொடர்ந்து வாழ்ந்துவருவதைத் தவிரவும்.

சினிமா கட்டாயம் தலையாய கலை என நம்புகிறேன். பத்து படங்கள் போதும் தேசம் அமைதியுற என நிச்சயமாக அடித்துச் சொல்ல விழைகிறேன். அதனால் உங்கள் முன்வைக்கிறேன். என்ன செய்யக் கூடாது என்பதுவும் என்ன செய்ய வேண்டும் என்பதுவும்....

உங்களுக்குத் தெரியாதா இயக்குநர்களே..?

நன்றி: கீற்று

# கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை



மில்லியனர்களின் (கோடீஸ்வரர்களின்) எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வரும் 10 ஆசிய நாடுகளில் இலங்கை 6 ஆவது இடத்தில் உள்ளது. ஹொங்கொங், வியட்நாம் ஆகியன இதில் முதலிடத்தில் உள்ளன. அந்நாடுகளில் 33 சதவீத வருடாந்த அதிகரிப்பு காணப்படுவதாக அமெரிக்க வங்கியின் செல்வ வள முகாமைத்துவப் பிரிவான “மெரில் லின்ச்”, அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. ஹொங்கொங், வியட்நாமுக்கு அடுத்ததாக இந்தோனேஷியா, சிங்கப்பூர், இந்தியா ஆகியன உள்ளன. இவற்றுக்கு அடுத்த இடத்தில் இலங்கை உள்ளது. கடந்த வருடம் முதல் தடவையாக ஐரோப்பாவைவிட ஆசியாவில் அதிக எண்ணிக்கையான மில்லியனர்கள் இருந்ததாக மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கடந்த வருடம் ஒரு மில்லியன் டொலர்களுக்கு மேல் சொத்துக்களைக்கொண்ட (அவர்களின் வீடுகள் நீங்கலாக) மக்களின் எண்ணிக்கை 3.3 மில்லியனாக இருந்தது. இது முந்தைய வருடத்தைவிட 10 சதவீதம் அதிகமாகும். இதன்படி 3.1 மில்லியன் மில்லியனர்களைக் கொண்ட ஐரோப்பாவை ஆசியா முந்தியுள்ளது. வட அமெரிக்கா இதில் முதலிடம் வகிக்கிறது. அங்கு செல்வந்தகர்களின் எண்ணிக்கை 8.6 சதவீதத்தால் அதிகரித்து 3.4 மில்லியனாக உயர்ந்துள்ளது. விரைவில் வட அமெரிக்காவை ஆசியா முந்திவிடும் என மெரில் லின்ச் நிறுவனத்தின் 3 நிர்வாகப் பணிப்பாளர்களில் ஒருவரான வில்சன் ஸோ கூறியுள்ளார். இதேவேளை உலகிலுள்ள ஒருகோடியே 10.9 மில்லியன் மில்லியனர்களில் அரைவாசிப் பேர் அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி ஆகிய நாடுகளில் வசிக்கின்றனர்.

67 உள்ளூர்.........1ம் பக்கத் தொடர்ச்சி...

இதன்படி, யாழ். மாவட்டத்தில் உள்ள 16 உள்ளூராட்சி சபைகள், கிளிநொச்சி மாவட்டத்தில் 3 உள்ளூராட்சி சபைகள், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 உள்ளூராட்சி சபைகள், அம்பாறையில் 2, திருகோணமலையில் 4, கொழும்பில் 3, கம்பஹாவில் 2, களுத்துறையில் ஒன்று, கண்டியில் 3, மாத்தளையில் 2, நுவரெலியாவில் ஒன்று, காலியில் 3, மாத்தறையில் ஒன்று, குருணாகலையில் 4, புத்தளத்தில் 4, அநுராதபுரத்தில் 3, பொலன்னறுவையில் 3, மொனராகலையில் 2, இரத்தினபுரியில் 4 மற்றும் கேகாலையில் 3 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறும்.


இதற்காக 70 இலட்சம் ரூபா செலவாகும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்திருக்கின்றது. வாக்காளர் அட்டை விநியோகம், வாக்களிப்பு நிலையங்களை அமைத்தல், எரிபொருள், மின்சாரம், அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் உட்பட பல விடயங்களுக்காக இவ்வளவு பணம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுவதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், சுயாதீனக் குழுக்களின் தலைவர்களை எதிர்வரும் முதலாம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய சந்திப்பொன்றுக்கு அழைத்துள்ளார். இந்தச் சந்திப்பு தேர்தல் செயலகத்தின் இடம்பெறவுள்ளது.

பஹ்ரைனில்.........1ம் பக்கத் தொடர்ச்சி...

தெரிவிக்கப்படுகின்றது. கடும்போக்குவாத ஷியா எதிரணித் தலைவர்களை இலக்கு வைத்தே இத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சட்டம், ஒழுங்கு சரியாக நிலைநாட்டப்படுகின்றது எனக் கூறிக்கொண்டு இவ்வாறான தண்டனைகளை பஹ்ரெய்ன் அரசாங்கம் வழங்கி வருவதை மேற்கத்திய மனித உரிமை ஆர்வலர்கள்கூட வன்மையாகக் கண்டிக்கின்றனர். இதேவேளை அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இத்தண்டனை குறித்து கவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆசிய ஆபிரிக்க.........1ம் பக்கத் தொடர்ச்சி...



நீதியமைச்சர்களும், ஆறு சட்டமா அதிபர்களும் அமர்வுகளில் பங்கேற்றனர்.

சர்வதேச சட்டங்களுக்கு முரணாக, பலஸ்தீனர்களை அவர்களது தாயகத்திலிருந்து வெளியேற்றிவிட்டு ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் யூதக் குடியேற்றங்களை ஏற்படுத்தல், அரசுகளின் மற்றும் அவற்றின் சொத்துக்கள் மீதான ஐ நா. வின் தற்காப்பு நியாயாதிக்க தீர்மானம், பெண்கள், சிறுவர் ஆகியோரை நாட்டுக்கு நாடு களவாகக் கடத்துதல் மற்றும் அவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள், வேறு நாடுகளில் சென்று தொழில் புரிவோரின் பிரச்சினைகள், சுற்றாடல் பிரச்சினைகள் சர்வதேச வர்த்தகப் பிணக்குகள், கடற் கொள்ளை போன்றவை இச்செயலமர்வின் போது கலந்தாலோசனைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ள பிரதான அம்சங்களாகும்.

இந்த ஆசிய, ஆபிரிக்க சட்ட ஆலோசனை அமைப்பின் ஸ்தாபக நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இந்த அமைப்பு நான்காவது தடவையாக தனது வருடாந்த அமர்வை இம்முறை இலங்கையில் நடாத்துகின்றது- ஏற்கனவே 1960 ஆம், 1971 ஆம், 1981 ஆம் ஆண்டுகளிலும் இந்த அமைப்பு தனது வருடாந்த அமர்வுகளை இந்நாட்டில் நடத்தியுள்ளது.


## கிரிக்கெட் சபை கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும்



இலங்கை அணியின் இங்கிலாந்து சுற்றுலாவின் பின்னர் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் (இலங்கை கிரிக்கெட் சபை) இடைக்கால நிர்வாகக்குழு கலைக்கப்படுமென விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பல வருடங்களாக இடைக்கால நிர்வாகக் குழுக்களினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அடுத்த மூன்று மாதங்களுக்குள் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுக்கான தேர்தலை நடத்துவது குறித்து ஆராயுமாறு உயர் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ண கபடி போட்டி பரிசுத்தொகை 2 கோடி ரூபா



உலகக்கிண்ண கபடிப் போட்டியில் முதலிடம் பிடிக்கும் அணிக்கு 2 கோடி ரூபா (இந்தியா) பரிசு அளிக்கப்படுமென்று பஞ்சாப் துணை முதல்வர் சுக்பீர் சிங் பாதல் கூறியுள்ளார். இதற்கு முன்பு பரிசுத்தொகை ரூ.2 கோடியாக இருந்தது. இப்போது இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது உலகக் கிண்ணக் கபடிப் போட்டி பஞ்சாப்பில் எதிர்வரும் அக்டோபர், நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா தவிர, பாகிஸ்தான், கனடா, ஸ்பெயின், பிரிட்டன் உள்ளிட்ட 2 நாடுகள் பங்கேற்கின்றன.

இதற்கென ஆப்கானிஸ்தான், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஈரான், இத்தாலி, நோர்வே போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஏற்பாடுகளை சுக்பீர் சிங் பாதல் ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாநிலத்தில் மொத்தம் 2 இடங்களில் போட்டி நடத்தப்படவிருக்கிறது. கிராமப் பகுதிகளிலும் போட்டி நடைபெறவுள்ளது. வெற்றிபெறும் அணிக்கு பரிசுத்தொகை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. முதல் பரிசு ரூ.2 கோடி,இரண்டாவது மூன்றாவது இடம் பிடிக்கும் அணிகளுக்கு முறையே 2 இலட்சம், 2 இலட்சம் ரூபா வழங்கப்படுமென்றார்.

## அதிக பணம் சம்பாதிக்கும் வீரர்கள் பட்டியலில் கோல்ப் வீரர்கள் முன்னிலை

உலகில் அதிக பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியலை ஸ்போர்ட் இல்லஸ்ரேட்டட் வெளியிட்டுள்ளது. அதன்படி கோல்ப் வீரர்கள் டைகர் வுட்ஸ், மிக்கல்சன் முதல் இரு இடத்திலுள்ளனர்.

டெனிஸ் வீரர் ரோஜர் பெடரர் 3 ஆவது இடத்திலுள்ளார். விளையாட்டு மற்றும் விளம்பரம் மூலம் அவர் ரூ.277 கோடி சம்பாதித்துள்ளார். குத்துச்சண்டை வீரர் மேனி பாக்கியூன் 4 ஆவது இடத்திலும் கார்ப் பந்தய வீரர் அலோசன்கா 5 ஆவது இடத்திலுமுள்ளனர். பிரபல கால்பந்து வீரர் மெஸ்சி 7 ஆவது இடத்திலும் ரொனால்டோ 8 ஆவது இடத்திலும் உள்ளனர.

## இந்திய வீரர்களை அனுமதிப்பதில்லை: இலங்கை அதிர்ச்சி





இலங்கை பிரிமியர் லீக் போட்டிகளில் விளையாட இந்திய வீரர்களை அனுமதிப்பதில்லை என்ற இந்திய கிரிக்கெட் சபையின் (பிசிசிஐ) தீர்மானம் குறித்து அதிர்ச்சியடைந்துள்ள இலங்கை கிரிக்கெட் இது குறித்து நாளை கலந்துரையாடவுள்ளது. நாளை இவ்விடயம் குறித்து இடைக்கால நிர்வாகக் குழு கலந்துரையாடும். இந்நிலைமையை நாம் ஆராய வேண்டியிருப்பதால் இது குறித்து இப்போதே கருத்துக்கூறுவது கால முதிர்ச்சியற்றதாகும் என இலங்கை கிரிக்கெட் செயலாளர் நிஷாந்த ரணதுங்க கூறியுள்ளார்.

இலங்கை மாகாண அணிகளுக்கிடையிலான இப்போட்டிகளில் 12 இந்திய வீரர்கள் விளையாடவிருந்தனர். பிரவீன் குமார், முனாவ் பட்டேல், இர்பான் பதான், தினேஸ் கார்த்திக், ஆர்.அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, மனோஜ் திவாரி, சௌரப் திவாரி, உமேஸ் யாதவ், வினய் குமார், மனிஷ் பான்டே, போல் வால்தாட்டி ஆகியோரே இவ்வீரர்கள்.

இவர்களுக்கு ஆட்சேபனையில்லை என்ற சான்றிதழை வழங்க இந்திய கிரிக்கெட் சபை மறுப்பு தெரிவித்துள்ளது. இப்போட்டிகள் இலங்கை கிரிக்கெட் சபையினால் அல்லாமல் சிங்கப்பூரை தளமாகக் கொண்ட சமர்செட் என்டெர்டெய்ன்மன்ட் எனும் தனியார் நிறுவனமொன்றினால் நடத்தப்படுவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இப்போட்டிகளை ஏற்பாடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள சமர்செட் என்டெர்டெய்ன்மன்ட் நிறுவனமானது இலங்கை கிரிக்கெட்டின் சந்தைப்படுத்தல் கிளையாகும் என நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜூலை 19 முதல் ஒகஸ்ட் 4 ஆம் திகதிவரை இப்போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடைசியாகக் கிடைத்த தகவலின்படி இலங்கை கிரிக்கட் சபை அதிகாரிகள் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவென இந்தியா செல்லவுள்ளனர் என அறிய வந்துள்ளது.




# S Q MARKETING

SQM

No. 52, Yasodhara Mawatha, Kalubowila, Dehiwela, Sri Lanka
Tel: 94 11 2727220, Fax 94 11 272228, Mob 94 773 144 145
Email: sqmarketing@sltnet.lk

SOFTA CARE

* ORTHOPEDIC AIDS
* CLINICAL PRODUCTS
* MEDICAL / SURGICAL CONSUMABLES
* HEALTH CARE PRODUCTS
* ECG, EEG, EMG & SCANNING CONSUMABLES
* MEDICAL EQUIPMENTS
* BIO MEDICAL ENGINEERING
* DENTAL PRODUCTS
* BABY CARE PRODUCTS
* LABORATORY EQUIPMENTS & CONSUMABLES
* FITNESS EQUIPMENTS




“தெளிவு” மாத இதழ் இளைய சமுதாயத்தினரின் குறிப்பாக மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தவும் அவர்களது எழுத்தாற்றலுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் உயர் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்டதாகும். பொதுவாக அனைத்து வயதினரும் வாசித்துப் பயன்பெறக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த கலை, இலக்கிய மாத இதழின் வளர்ச்சிக்கு உங்கள் ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் நாம் நாடி நிற்கின்றோம்.

பின்வரும் இடங்களிலும் எமது பத்திரிகைகளைப் பெற்றுக் கொள்ளலாம். வேறு முகவர்கள் இதனை விற்பனை செய்ய விரும்பினால் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். கவர்ச்சியான கழிவு தரப்படும்.

| | |
|---|---|
| Zeenath Dharbar Book Depot, | Symond's Road, Maradana. |
| | New Street, Weligama. |
| Rizwies, | 114, Galle Rd., Wellawatte. |
| Poobalasingam Book Shop | Colombo 6 |
| New City Stores | Akurana. |
| Hira Book Shop & Communication, | Akurana. |
| Abdullah & Co. | Super Market, Nawalapitiya. |
| Nawshad Traders, | Main Street, Akkaraipatru. |
| People's Shopping Centre, | Main Street, Addalaichenai. |
| Haniffa Hotel & Tea Room | Main Street, Kalmunai. |
| Sadham Food City, | Hairath Road, Valaichenai. |